விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 03 புதன்கிழமை (19.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 305

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# ஊழல் விசாரணைகளை முடக்குவது நோக்கமல்ல

## ஜனாதிபதியின் சர்ச்சைக்குரிய பேச்சுக் குறித்து விளக்குகிறார் அமைச்சர் மகிந்த சமரசிங்க!



(கொழும்பு)

பாரிய ஊழல் மோசடிகள் மற்றும் பாரதூரமான குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளை முடக்குவதோ அல்லது குழப்புவதோ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நோக்கமல்ல என தெரிவித்த அமைச்சர் மகிந்த சமரசிங்க, நாட்டில் மூன்று தசாப்த காலமாக நீடித்த கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த படைத் தளபதிகளையும், படையினரையும் பாதுகாக்கும் நோக்கிலேயே ஜனாதிபதி சத்விரு சங்ஹித உரையை நிகழ்த்தியதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை மாணவி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்.கீரிமலை நகுலேஸ்வரா வீதியை சேர்ந்த அரியசேகரம் தர்ஷிகா (வயது15) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## சிறுபான்மை மக்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்

### ஐ.நா நிபுணர் ரீட்டா கருத்து

(கொழும்பு)

சிறுபான்மையின மக்களின் அடிப்படை வாழ்வாதார தேவைகள குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிறுபான்மை இன மக்களின் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விஷேட நிபுணர் ரீட்டா இசாக் நாடியா தெரிவித்தார்.

உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சிறுபான்மை இன மக்களின் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள்

23ஆம் பக்கம் பார்க்க....

## இனப்பிரச்சினை தீர்க்கப்படாததாலேயே கொடிய யுத்தத்தை எதிர் கொண்டோம்!

### அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்த நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஆட்சியைக் கைப்பற்றவே இனப்பிரச்சினை தொடர்பில் பேசினார்களே ஒழிய, அதற்கு அரசியல் தீர்வொன்றைக் காண முயற்சிக்கவில்லையென உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற கண்டி விகாரமஹா தேவி கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போது உயர்கல்வி அமைச்சர்

24ஆம் பக்கம் பார்க்க....



## தமிழ் மக்களை ஏமாற்றியதாகவே அரசியல் தீர்வு கிடைக்கப்பெறும்!

### விழிப்படைய வேண்டுமெனத் த.தே.ம முன்னணி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்றி ஒற்றை ஆட்சிக்கு ஆதரவளிக்கும் இரகசிய செயற்பாடுகளில் இறங்கியுள்ளதாக தெரிவித்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, இது தொடர்பில் மக்கள் உடனடியாக விழிப்புணர்வு அடைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

நாட்டில் போர் முடிவடைந்த பின்னர், மகிந்த அரசு தோற்கடிக்கப்பட்டபின்னர், ஒற்றையாட்சியின் கீழ்

23ஆம் பக்கம் பார்க்க....



## பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டது

(கொழும்பு)

நாட்டின் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு உட்பட தொழில்சார் நலன்களை கொண்ட இருதரப்புகூட்டு உடன்படிக்கை 19 மாத கால இழுபறியின் பின்னர் நேற்று செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

கடந்த 19 மாதங்களாக நீடித்த இந்த பிரச்சினை தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

தோட்ட நிர்வாகிகளின் சம்மேளனத்திற்கும் தொழிற் சங்கங்களுக்குமிடையில் சர்வதேச முதலீட்டு வர்த்தக அமைச்சில் இந்த உடன்படிக்கை கைச்சாத்தானது.

புதிதாக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி தற்போது தேயிலை மற்றும் ரப்பர் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் 620 ரூபாய் தினசரி வேதனம் 730 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வருடத்தில் 300 நாட்கள்

23ஆம் பக்கம் பார்க்க....

பனை அபிவிருத்திச் சபை நடத்தும்

ஞாலத்தில் புதுமை புகும் தாலம்

பனைசார் உற்பத்திகள் மற்றும் புதிய தொழில்நுட்பம் தொடர்பான கண்காட்சியும் ஆய்வரங்கும் மற்றும் விற்பனையும்.

இடம் - யாழ்.மத்திய கல்லூரி
காலம் - 21, 22, 23/10/2016
நேரம் - மு.ப 10.00 - பி.ப 05.00

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்

## வாள்வெட்டுடன் தொடர்புடைய நபர்களுக்கு பிணை வழங்க மறுப்பு

### நீதிபதி இளஞ்செழியன் இறுக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முலவைச் சந்திப் பகுதியில் வாள்களுடன் பகிரங்கமாக மோட்டார் சைக்கிள்களில் அடாவடித்தனம் புரிந்த குழுவைக் கைது செய்ய பொலிஸ் அணிகள் பல களத்தில் இறங்க வேண்டியிருந்தது.

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம் (C-6155)

பாமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392




## வாடகைக்கு

யாழ் மருத்துவ பீட (ஆடியபாத வீதி சுற்றாடல் பகுதியில் மேல்மாடி வீட்டின் மேற்பகுதி மட்டும் வாடகைக்கு கொடுக்கப்படும் (2 அறை,விறாந்தை, குசினி) பிரத்தியேக வழி. (6369)

தொடர்பு :- 077 600 7743


## என்றும் எமது நன்றிகள் பற்பல...



**J/215** அளவெட்டி வடக்கு கிராமியச் செயலகத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா 09.10.2016 ஞாயிறு அன்று நடைபெற்றவேளை இங்கு பல வாழ்வாதாரத் திட்டங்களும் வழங்கப்பட்டன. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் 15 பேருக்கு துவிச்சக்கர வண்டிகளும் 300 வரையான மாணவர்களுக்கு காலணிகளும் 100 முதியோருக்கு உடுபுடைவைகளும் 50 வரையானோருக்கு புலமைப்பரிசில் சித்தி பெற்றமைக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்கிய தாராள மனம் கொண்ட எம் அன்பு நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு இறுதிவரை இருந்து ஒத்துழைத்த யாழ். அரசாங்க அதிபர் திரு.நாகலிங்கம் வேதநாயகன் அவர்களுக்கும் ஏனைய விருந்தினர்கள் யாவருக்கும் மற்றும் பாடசாலை மாணவர்களை கௌரவிப்புக்காக சிறந்தமுறையில் தெரிவு செய்து முழு ஒத்துழைப்பு வழங்கிய அருணோதயா, மகாஜனக்கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் சில தவிக்க முடியாத இடையூறுகள் காரணமாக கலந்துகொள்ள முடியாத விருந்தினர்களுக்கும் கலந்து சிறப்பித்த உத்தியோகத்தர்கள் மற்றும் அலைகடலென வந்து பங்குபற்றிய பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் இந் நிகழ்வு சிறப்புற ஒத்துழைத்து நடத்தி ஏனைய மிகுதிச் செலவுகளையும் அன்றைய விழாச் செலவினையும் பொறுப்பேற்ற அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தினருக்கும் அன்றைய மலர் வெளியீட்டில் முழு ஒத்துழைப்பு வழங்கிய கிராம அலுவலர் மாலாதேவி அவர்களுக்கும் மற்றும் ஞானவைரவர் விளையாட்டுக் கழகத் தலைவர் செ.சாரங்கன் மற்றும் நிர்வாகத்தினருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

கிராமச் செயலகம்
J/215 அளவெட்டி வடக்கு.

(C-6160)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் துரையன் இராசம்மா

தோற்றம் 01.12.1940 மறைவு 18.10.2016



வே.கமலராஜா அவர்களின்
அன்பு மாமியார் அமரர் துரையன் இராசம்மா
அவர்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

பணியாளர்களும் நிர்வாகமும்
நெல்லியடி மெடிக்கல்ஸ்
நெல்லியடி கிளினிக்

(C-6161)

## வித்தியா படுகொலை வழக்கு;

## 12 சந்தேக நபர்களுக்கும் தொடர் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்) புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலை சந்தேக நபர்களது வழக்கு விசாரணையை எதிர வரும் மாதம் முதலாம் திகதி வரை ஒத்தி வைக்க ஊர் காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மாணவி படுகொலை செய்யப்பட்டதையடுத்து இக் கொலை சம்பவம் தொடர்பில் பன்னிரெண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணையானது ஊர் காவற்றுறை நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இந் நிலையில் நேற்றைய வழக்கு விசாரணையின் போது பன்னிரெண்டு சந்தேக நபர்களும் சிறைச்சாலை அதிகாரிகளால் மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

தொடர்ந்து இவ் வழக்கு விசாரணையில் சந்தேகநபர்களது விளக்க மறியலை எதிர்வரும் மாதம் முதலாம் திகதி வரை நீடித்துள்ளதுடன் அதுவரை வழக்கு விசாரணையை ஒத்தி வைக்கவும் நீதவான எம்.எம்.றியால் உத்தரவிட்டார். (செ-5)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள்



சி.அபிநயா - 160 | ந.ரம்யா - 160 | கு.ஜனஜன் (175) | ச.டினோஜ் - 158 | சி.ரித்திகா - 157

ச.திவ்ஜா - 155 | ச.யஸ்மிதா - 154 | ச.பிரவீணா - 154 | ஜெ.லதுஷானி - 153

2016-ம் ஆண்டு நடைபெற்ற 5-ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல்பெற்று சித்தியடைய வைத்து அவர்களின் உயர்ச்சிக்கு வழிகாட்டிய யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் வகுப்பாசிரியர் திரு.த சரத்பாபு மற்றும் தரம் 5 ஆசிரியர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் பகுதித் தலைவர் அனைவரையும் பாராட்டுகின்றோம்.

சித்தியடைந்த மாணவச் செல்வங்களின் பெற்றோர்கள்

# பிரபாகரன் உயிரிழந்து விட்டதாக பொன்சேகா என்னிடம் கூறினார்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

***தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவே தன்னிடம் தெரிவித்ததாக முன்னாள் பாதுகாப்புச்செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.***

ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

நாட்டின் அரசியலில் தற்போது வரையில் நான் நேரடியாக தொடர்புபடவில்லை. அதனால் ஒவ்வொரு நாளும் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் கவனம் செலுத்திக் கொண்டுதான் இருக்கின்றேன்.

இருப்பினும் நாட்டின் சகலதுறைகளும் மந்த கதியில் பயணிக்கின்றன என்பதே சகலரதும் கருத்தாக அமைந்துள்ளது. கடந்த அரசாங்கம் பல்வேறு துறைகளுக்கும் வழங்கிய சேவைகள் இன்று முடங்கியுள்ளன.

இது எமது நிலைப்பாடு மாத்திரமல்ல நாட்டு மக்கள் பலர் இந்த நிலைப்பாட்டிலேயே உள்ளனர். இந்த அரசாங்கத்திடம் நாட்டை







முன்னோக்கி நகர்த்துவதற்கான உரிய செயற்றிட்டங்கள் எதுவும் இல்லை.

இல்லாவிட்டால் கடந்த அரசாங்கத்தினை வீட்டிற்கு அனுப்புவதற்கான திட்டம் மட்டுமே இவர்களிடத்தில் இருந்துள்ளது என்றே நான் கருதுகின்றேன்.

எனது துறையை சம்பந்தப்படுத்திகூறுவதாயின் இன்று பாதுகாப்பு தரப்பிற்குள் பல்வேறு தளம்பல் நிலைமைகள் தோன்றியுள்ளன. அவற்றை சீர்படுத்துவதற்கான எவ்வகையிலான திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை.

பாதுகாப்பு தரப்புக்கள் விடயத்தில் சிறந்த தலைமைத்துவத்தினை வழங்கக் கூடிய ஒருவரும் அரசாங்கத்தில் இல்லை. குறிப்பாக வடக்கின் பாதுகாப்பு விடயத்தில் இந்த அரசாங்கம் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் குறித்து சிறிதும் திருப்தியடைய முடியாதுள்ளது.

பொருளாதாரத்தைப்பற்றி நோக்கும் போது இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும் முன்னதாக சீனாவுடனான பொருளாதார உறவை முறித்துக்கொள்வதையே பிரதான இலக்காக கொண்டிருந்தது.

அதன் பிரகாரம் ஆட்சிக்கு வந்த பின்னர். சீனாவுடனான பொருளாதார செயற்பாடுகள் பலவற்றுக்கு முற்றுப் புள்ளி வைத்திருந்தனர். அதன் பலன்களையும் இன்று அரசாங்கம் அனுபவித்துக் கொண்டுள்ளது.

தூரநோக்கற்ற செயற்பாடுகளே பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணமாகியுள்ளன. கொழும்பு. காலி. கண்டி ஆகிய மாவட்டங்களை அபிவிருத்தி செய்ய நாம் திட்டங்களை வகுத்து அதற்கான கடனை உலக வங்கியிடத்தில் பெற்றுக் கொண்டு வேலைத் திட்டங்களையும் ஆரம்பித்திருந்தோம்.

ஆனால்அவற்றை நிறைவு செய்யும் முன்னர் ஆட்சி மாறிவிட்டது. இது ஐந்து வருடத் திட்டம். அதனை 3 வருடத்தில் நிறைவு செய்யவே நாம் திட்டமிட்டோம். அதற்கமைவாக வேகமாக குறித்த திட்டங்களை நடைமுறைப்படுத்தினோம்.

அவற்றை நிறைவு செய்ய இன்னும் இரண்டு வருடங்கள் உள்ளன. அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணமும் இருக்கின்றது. ஆனால். திட்டங்கள் நடை முறைப் படுத் தப் படுகின் றனவா? என்பதே கேள்விக் குறியாக வுள்ளது.

இதேவேளை. கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்றதாக கூறப்படும். ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளை நடத்தட்டும். அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அடித்தளமற்ற காரணங்களை மையப்படுத்தி விசாரணை நடத்தக்கூடாது.

அத்துடன் முப்படையின் முக்கியஸ்தர்களையும் இராணுவ வீரர்களையும் அடிக்கடி விசாரணை என்ற பேரில் அழைத்து அலைக்கழிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமல்ல. எந்த விடயத்திலும் ஒரு நீதியான படிமுறை இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை பெற்றுக்கொள்ள இறுதிக்கட்டப்பேச்சு

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் ஜி.எஸ். பி.பிளஸ் வரிச் சலுகையை மீளப் பெற்றுக்கொள்தற்கான இறுதிக்கட்டப் பேச்சுக்கள் வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பெல்ஜியத் தலைநகர் பிரசல்ஸிற்கு சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான உயர் மட்டத் தூதுக் குழுவினர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ள நிலையிலேயே அரசாங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கைக்கு மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை கிடைக்கும் என்றும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு பிரசல்ஸிற்கு சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பெல்ஜியத்தின் இளவரசர் லொவ்ரானுடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

மீள் புதுப்பிக்கக்கூடிய சக்தி நிலையத்திலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. பெல்ஜியத்தின் மன்னர் பிலிப்பின் இளைய சகோதரரான லொவ்ரர் இளவரசர் இயற்கை வள. நிரந்தரமான முகாமைத்துவம் மற்றும் தூய சக்தி வளத் தொழில் நுட்பத்திற்கான நிலையத்தின் தலைவராகவும் கடமையாற்றுகின்றார்.

இதற்கமைய பெல்ஜியத்தில் நடைமுறையிலுள்ள மீள் புதுப்பிக்கக்கூடிய தூய சக்தி வலுப்பாடு தொடர்பிலேயே பிரதமர் ரணிலுக்கும் பெல்ஜிய இளவரசர் லொவ்ரானுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

அணுமின் நிலையங்களைக் கொண்டே பெல்ஜியத்தில் தற்போது மின் தேவை பூர்த்தி செய்யப்படுகின்ற போதிலும். எதிர்காலத்தில் மீள் புதுப்பிக்கக் கூடிய மின்சக்தியை பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் இளவரசர் பிரதமருக்குத் தெரிவித்துள்ளார்.(இ-7)

## சட்டவிரோத மீன்பிடிக்கு எதிராக கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம்






(கொழும்பு)


சட்டவிரோத மீன்பிடிக்கு எதிராக கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் நேற்று முன்னெடுத்துள்ளது.

சட்டவிரோதமான சுருக்கு வலை. தங்கூசி வலை. லைலா வலை. வெடிபொருட்கள் பயன்படுத்தல். இந்தியன் இழுவைப் படகு போன்றவற்றை உடனடியாக தடை செய்ய வேண்டும் என வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 18 மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் கலந்து கொண்டனர். (இ-7-10)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பரமலிங்கம் (பரமு)



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வாழ்விடமாகவும் கோணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமலிங்கம் (பரமு) நேற்று (18.10.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சத்தியதேவியின் (கிளி) அன்புக் கணவரும் மகேஸ்வரி, நாகேஸ்வரி, அமரர் குணலட்சுமி ஆகியோரின் சகோதரனும் முகுந்தன், மலர்விழி (மீரா), பரணி, நிசாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிரிதா, குமரேசன், பிரபாகரன் ஆகியோரின் மாமனும் அபிநயா, அருவின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2016) 11 மணியளவில் இல.54, கோணாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோணாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-6151)

இல. 54, கோணாவில்,
கிளிநொச்சி

தகவல்
மகன்

## விழிநீர் சொரிகின்றோம்

அன்னை மடியில்
19 - 03 - 1950



இறைவன் அடியில்
16 - 10 - 2016



(6370)

## திருமதி செல்லத்துரை பொன்மலர்

துன்னாலை தெற்கு கலிகையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை பொன்மலர் 16.10.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பூமணி தம்பதியரின் பாசமிகு மகளும் வல்லி, சின்னத்தங்காளின் அன்பு மருமகளும் செல்லத்துரையின் பாசமிகு மனைவியும் தங்கராசா, புஸ்பராணி (பிரான்ஸ்), புஸ்பராசா, செல்வமலர் (பிரான்ஸ்), சுசியேந்திரராணி, சுரேஸ்வரராஜா (கனடா), ரிசியேந்திரராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரன் (செட்டி- பிரான்ஸ்), ஜொகதீஸ்வரன் (கிரி), பிரதீஸ்வரன் (பிரான்ஸ்), பிறேமினி (கீதா), நிமல் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காயத்திரி (பிரான்ஸ்), வித்தியா, மீரா (பிரான்ஸ்), ஸ்ரீகரன், சீதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிரிசாந், கிரிந்தன், கிரிம்சிகன், ஸ்ரீஜன், பிறிம்சன், பிறேமிக்கா, ஜெனுசா (பிரான்ஸ்), அபிசேக் (பிரான்ஸ்), ரதீஸ் (பிரான்ஸ்), மதுசா (பிரான்ஸ்), நிருஸ் (பிரான்ஸ்), அஸ்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று வித்துடல் தகனக்கிரியைக்காக துன்னாலை பிட்டுத்தூ இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர் T.P: 077 405 5691











கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் நவராத்திரி விழா கடந்த 8 ஆம் திகதி தலைவர் கணேசன் திருமாலழகன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆசியுரையினை கரணவாய் கிழக்கு உச்சில் அம்மன் ஆலய குரு தியாகராஜக்குருக்கள் ஸ்ரீதரக்குருக்கள் வழங்கினார்.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக செல்லத்துரை பகீரதன் (IML delevery system Co-ordinator), சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு ,மேற்கு பிரதேச சபை செயலாளர் அ.வினோராஜ் ,நெல்லயடி பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி ஆ.பி.ஏ.பிரியந்த ,கௌரவ விருந்தினராக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் யாழ். பல் கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இராஜரஞ்சன் ஆதித்தியனுக்கு சி.சீவரத்தினம் லீலாவதி குடும்பத்தினர் ரூபா 10 ஆயிரம் வழங்கி வைத்ததுடன் திருமதி சஞ்சிதம் குட்டித்தம்பி ஞாபகார்த்த நிதியினை பிரதம விருந்தினர் அவர்கள் வழங்கி வைத்தார்.

# நீதி நூல் மனனப்போட்டி


((யாழ்ப்பாணம்)

வண்ணை- சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபி விரு த்திக் கழகம் வருடம் தோறும் நடத்திவரும் நீதி நூல் மனனப் போட்டி நாளை 20 ஆம் திகதி வியா ழக்கிழமை பி.ப 3 மணி முதல் யாழ்.இந்துக் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

தரம்1, தரம்2 மாணவர்களுக்கு நடைபெறும் இப்போட் டிக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 825 பரீட்சார்த்திகள் தோற்ற வுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சார்த்திகள் கல்வி கற்கும் பாடசா லைகளுக்கும் அறநெறிப் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டு ள்ளதாக சைவசமய அபிவிருத்திக் கழக பரீட்சைச் செயலர் சு. சிறீ காந்தன் அறிவித்துள்ளார். (இ

# பெல்ஜியத்தில் சொக்லெட் தயாரித்த ரணில்





(கொழும்பு)

பெல்ஜியத்துக்கு உத்தி யோகபூர்வ விஜயம் மேற் கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சொக்லெட் களை தயாரித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க சொக்லெட் தயாரிப் பதை போன்ற புகைப்படங் கள் சமூக வலைத தளங்க ளில் பரவிவருகின்றது.

பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வது மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந் துரை யாடுவதற்காக பிரதமர் பெல்ஜியம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக் கது. (இ-7)

# இராசி பலன்

19.10.2016

(ஐப்பசி 3, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

சதுர்த்தி பின்னிரவு 1.17 மணிவரை

கார்த்திகை முற்பகல் 7.46 மணிவரை

சுபநேரம் 4.32-6.02 மணிவரை

இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்

அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம் | | |
| | | | ராகு |
| செவ் | சனி<br>சுக் | சூரி<br>புத | குரு |

**மீனம்**
உடன் பிறப்புகளின் ஆதரவு பெருகும் நாள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பம் ஏற்படலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்**
காரியத்தில் கண்ணும் கருத்து மாக செயற்படுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப் பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, குடும் பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்**
குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், உடல்நலன் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரிய வர்களாக நடந்து கொள்வர், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்**
வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம்.

**கும்பம்**
உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பா ர்த்த ஆதாயம் கிடைக்கலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள்.

**கடகம்**
அரசு வழியில் எதிர்பார்த்த சலு கைகள் கிடைக்கும் வாய்ப்பு ண்டு, குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், இல்லத் தில் இனிய சம்பவங்கள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மகரம்**
செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**சிம்மம்**
தொட்ட காரியங்கள் துளிர் விடும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிந்து பலரது பாராட் டுக்களைப் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்.

**தனுசு**
சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆற்றல் மிக்க வர்கள் உங்களுக்கு பின்னணி யாகச் செயற்படுவர், அடுத்த வர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
தொலைபேசி வழியில் அனு கூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்க ளின் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள்.

**துலாம்**
பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள் வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**கன்னி**
மங்கையர் வழியில் எதிர்பா ர்த்த உதவிகள் கிடைக்க லாம், வரவேண்டிய பணவர வுகள் இன்று எளிதில் வசூலா கலாம், தந்தை வழி உறவில் தனவரவுகள் வந்து சேரலாம்.

# கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில்

# சர்வதேச விசாரணை கோரி யாழில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை கோரி யாழில் இன்று போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.**

யாழ்.ஊடக அமையம் ஏற்பாடு செய்துள்ள இந்த போராட்டத்தில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த அனைத்து ஊடக தரப்பும் கலந்து கொண்டு நீதியான விசாரணையை வலியுறுத்தவுள்ளனர்.

கொல்லப்பட்ட ஊடகவியலாளரான நிமலராஜனின் 16 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டே இந்த போராட்டம் நடைபெறவுள்ளது.

மேலும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் இன்றி பணியாற்றுவதற்கு அனைத்து மட்டங்களிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், தகவலறியும் உரிமை சட்டத்தை உடனடியாக அமுல்படுத்தல் என்ற கோரிக்கைகளும் இதன்போது முன்வைக்கப்படவுள்ளது.

யாழ்.பேருந்து நிலையம் முன்பாக நடைபெறவுள்ள போராட்டத்திற்கு தென்பகுதி ஊடக அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடங்களுக்கு மேலாகிவிட்ட நிலையில் தென்னிலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் மட்டுமே விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும் கடந்த காலங்களில் கொல்லப்பட்ட, கடத்தப்பட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் இதுவரை எந்த விசாரணையும் நடைபெறவில்லை.

அவர்களுக்கான நீதி என்பது தொடர்ந்தும் மறுக்கப்பட்டு கொண்டே உள்ளது. இந்த நிலையில் தான் புதிய அரசின் காலத்தில் தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் சர்வதேச தரப்பு ஒன்றின் முன்னாள் நீதியான விசாரணை ஒன்றை கோரி இந்த போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. (இ-4)





சில்லாலை சென். ஜேம்ஸ் முன்பள்ளியின் ஆசிரியர் தின விழாவும் சிறுவர் தின விழாவும் கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை அதிபர் கு. ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர் நடேசு பாஸ்கரன்(ஜே.பி), சிவன் பவுண்டேசன் பணிப்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## பிளவுபடாத நாட்டிற்குள் நிரந்தர சமாதானச்சூழல்

### ஐ.நாவின் புதிய செயலாளருக்கு தமிழ்க் கூட்டமைப்பு கடிதம்

பிளவுபடாத ஒன்றிணைந்த நாட்டிற்குள் நிரந்தர சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் எதிர்பார்க்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஐ.நாவின் புதிய செயலாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

புதிதாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ கட்டரஸ்‌க்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. ஏகமனதாக இடம்பெற்ற அவரது தெரிவானது அவர் மேலுள்ள நம்பிக்கைக்கு ஒரு ஆதாரமாகும்.

புதிய நியமனத்திற்கு வாழ்த்துக்களை தெரிவிக்கின்ற அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, நீதி மற்றும் சமவுரிமையை அடிப்படையாக கொண்டு பிளவுபடாத ஒன்றிணைந்த நாட்டிற்குள் நிரந்தர சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் கருமத்தில் தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்கும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையை நிலை நாட்டி இழப்பீடு மற்றும் மீள் இடம்பெறாமை போன்றவற்றை உறுதிசெய்வதன் மூலம் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் முகமாக வெளிச்செல்லும் செயலாளர் நாயகம் முன்னெடுத்த பணிகளை, புதிய செயலாளர் நாயகம் தொடரவேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பானது வலியுறுத்த விரும்புகின்றது.

இலங்கையில் கூடிய சீக்கிரத்தில் நிலையானதும் கௌரவமானதுமான சமாதானத்தை கொண்டு வரும் நோக்கில் புதிய செயலாளர் நாயகத்தோடு இணைந்து செயலாற்றுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# தேசிய கொள்கையை தயாரிப்பதற்கான முன்னாயத்த கலந்துரையாடல் யாழில்







(யாழ்ப்பாணம்)

மூத்த பிரஜைகளுக்கான தேசிய கொள்கையினை தயாரிப்பதற்கான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ். மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் உள்ள மூத்த பிரஜைகளின் எதிர்பார்ப்புக்கள், தேவைகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பான கருத்துக்கள் மூத்தபிரஜைகளால் முன்வைக்கப்பட்டன.

மூத்த பிரஜைகளுக்கான தேசிய கொள்கையினை தயாரிப்பதற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள முதியவர்களின் கருத்துக்களை உள்வாங்கி அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

குறித்த குழு இன்றைய தினம் காலை 9 மணியளவில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் காரியாலயத்தில் திட்ட வரைபு தயாரிப்பது தொடர்பாக கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுவதென முடிவெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை உறுப்பினர்கள், யாழ். மாவட்டத்தில் உள்ள மூத்த பிரஜைகள் சமூக சேவைகள் திணைக்கள அதிகாரிகள், மாவட்டச் செயலக பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தியோகத்தர்கள், திட்டப்பணிப்பாளர்கள், சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (இ-9)




# பட்டினி ஒழிப்பு பட்டியலில் இலங்கைக்கும் ஓர் இடம்

(கொழும்பு)

உலகில் பட்டினியை ஒழித்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 87ஆவது இடத்தை பிடித்துள்ளதாக "உலக பட்டினி குறியீட்டெண் பட்டியல்" ஆய்வறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. 118 அபிவிருத்தி அடைந்து வரும் நாடுக ளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை அண்மித்துள்ள தெற்காசிய நாடுகளான இந்தியா 97ஆவது இடத்தையும், அதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் இடம்பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உலகளாவிய ரீதியில் 29 சதவீதத்தால் பட்டினியர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும்,2000 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் Ruwanda, கம்போடியா மற்றும் மியன்மார் உள்ளிட்ட 20 நாடுகளின் பட்டினி ஒழிப்பு 50 சதவீதமாக குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இதேவேளை, பட்டினி ஒழிப்பில் மத்திய ஆபிரிக்க குடியரசு, சாம்பியா, மடகஸ்கார், ஏமன் குடியரசு உள்ளிட்ட நாடுகள் இறுதி இடத்தை பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் பட்டினி ஒழிப்பில் உலக அளவில் தென் அமெரிக்க நாடுகள் முதலிடத்தை வகிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரல்

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸால் சாரதி சேவைக்கும் ஏனைய சேவைகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

- அம்புலன் சாரதி A தர அனுமதிப்பத்திரத்துடன் 5 வருடங் களுக்கு குறையாத அனுபவம் உடைய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந் தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- கணனி தட்டெழுத்தாளர்
- ஆண், பெண் நோயாளர் பராமரிப்பு தொண்டர்கள் போன்ற வேலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியுடையோர் உரிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இல. 161, முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம், எனும் முகவரியில் அமைந்துள்ள சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு வருகை தரவும் என யாழ்.மாவட்ட சென்.ஜோன் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ-3)

# நாய்களின் எண்ணிக்கை 25 இலட்சமாக குறைப்பு

(கொழும்பு)

சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் ஊடாக நாட்டின் சகல பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்ட அறுவை சிகிச்சை ஊடாக 2008ஆம் ஆண்டுக்குப் பின்னர், சுமார் 30 இலட்சமாக இருந்த நாய்களின் எண்ணிக்கை தற்போது, 25 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான முறையில் விலங்குகளை மேலாண்மை செய்வதற்கான கால்நடை வைத்தியர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கால்நடை வைத்தியர் சமித் நாணயக்கார, இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை சுமார் 9 இலட்சம் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதன் ஊடாக நீர் வெறுப்பு நோயை குறைக்க முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா:73 செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:O/L வீடியோ எடிற்றிங்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/6313

பிறப்பு: 1989
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா : 13 சூரி செவ் 11 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:A/L நிரந்தர அரச தொழில்
தொ.இ: B/6316

பிறப்பு: 1978
நட்சத்திரம்: அனுஷம் 1
கி.பா. :3
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L அரச (O.E.S)
தொ.இ: B/6318

பிறப்பு: 1989
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா:27 செவ் 1 இல்
உயரம்: 166cm
தகைமை/தொழில்:A/L ஆசிரியர் (அரச)
தொ.இ: B/6319

பிறப்பு: 1989
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 17.5 செவ் 2 இல்
தகைமை/தொழில்: Doctor
தொ.இ: G/6328

பிறப்பு: 1986
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: 32 செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:CIMA
தொ.இ: G/6329

பிறப்பு: 1994
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா:26
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: தாதி (தனியார்)
விவாகரத்துப் பெற்றவர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6331

பிறப்பு: 1989
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 56 செவ் சுக் 1 இல்
உயரம்: 170 cm
தகைமை/தொழில்: A/L வங்கி உத்தியோகத்தர் (அரச)
தொ.இ: G/6332

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொ ர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதையும் அறியத்தருகின்றோம்)






IELTS

இந்த ஆண்டு September - October மாதங்களில் British Council - Colombo இல் நடைபெற்ற IELTS ஆசிரியர் Workshop மற்றும் Trainings இல் பங்குபற்றி IELTS பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு British Council இனால் அங்கீகாரம் பெற்ற ஆசிரியரினால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றது.

OUR TARGET IS BAND : 9

கடந்த 27.07.2016 ல் Colombo Cinnamon Lakeside Hotel ல் நடைபெற்ற வைபவத்தில் கடந்த வருடம் 2015 ல் கொழும்பில் IELTS பரீட்சையில் அதிக பட்ச பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கட்கு Scholarship ஆக £3000 வழங்கப்பட்டது. இந்த வருடத்தில் எமது கல்வி நிலையத்தில் இருந்து அதிகபட்சப் புள்ளிகளை மாணவர்கள் பெற வேண்டும் என்பதற்காக அதிக கவனம் எடுத்து கற்றல் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இன்றே வகுப்பில் சேருங்கள்.

IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கின்றோம்.
Pearson English Course Level B2
எனவே இரண்டு பாடநெறிகளையும் ஒரு கட்டணத்திலேயே நிறைவு செய்யலாம்.

வகுப்புக்கள் இப்பொழுது நடைபெறுகின்றன




எமது கல்வி நிலையம் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சிறந்த நிலையம் என British Council னால் Awards வழங்கி கௌரவிக்கப்பட்ட நிலையமாகும்.

COURSE SCHEDULE
Mon, Tues, Wed, Thus 60 Hours 8.30 - 11.30, 5.00 - 7.00
Saturday & Sunday 60 Hours Time: 8.30 - 12.00

IELTS LIFE SKILLS A1, B1

March, April, May, June, July, August - 2016 ஆகிய மாதங்களில் நடைபெற்ற A1, B1 பரீட்சைகளில் எமது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அடிப்படையில் இருந்து ஆங்கிலம் 2 மாதங்களில் பூரணமான அறிவைப் பெற்று பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.

IELTS Registration Centre for British Council

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna. [பெருமாள் கோவிலடி தினக்குரல் காரியாலயத்திற்கு முன்னால்]
Tel : 021 222 0364 , 077 880 3887

# கிளிநொச்சி மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம்

## காலபோக நெற்செய்கை தொடர்பில் முழுமையாக ஆராய்வு





கிளிநொச்சி மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் எதிர்வரும் காலபோக நெற்செய்கை தொடர்பாக முழுமையாக ஆராயப்பட்டது.

குறிப்பாக விவசாயக் குளங்களின் கீழ் அனைத்து விவசாயிகளும் எத்தனை மாத விதை நெல்லினங்களை விதைக்க வேண்டும். அவ்வாறு விதைக்க தவறும் பட்சத்தில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் .அத் தோடு கால்நடை வளர்ப்போர் கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டும்.அவ்வாறு தவறும் பட்சத்தில் கால்நடைகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் கரைச்சி கண்டாவளை. பூநகரி.பளை ஆகிய பிரதேச செயளாளர்கள்மற்றும் மாவட்ட நீர்ப்பாசன திணைக்களம் விவசாயத் திணைக்களம் விதை ஆராய்ச்சி திணைக்களம்.விதை உற்பத்தி திணைக் களம் எனப் பல விவசாயம் சார் திணைக்கள உத்தியோகத்தர்களும் மாவட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# முல்லைத்தீவு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் நிறுவப்பட்டது

முல்லைத்தீவில் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யுத்த காலப் பகுதிகளில் சிறப்புற இயங்கி வந்த போதிலும் யுத்தத்திற்கு பின்னர் இதுவரையில் அத்தகைய இணையம் இல்லாத நிலையே காணப்பட்டது.

இதன் தேவையை உணர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் முயற்சியில் கடந்த 12 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது.

இக்கூட்டத்திற்கு 18 உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த 25 அதிகாரிகள் பங்குபற்றியிருந்தனர்.

தலைவராக கே.கெங்கைநாதன் -RAHAMA, உப தலைவராக எஸ்.சிவஞானம்-Berendina - DS, செயலாளராக கே.நிதர்சன்-SLRC, உப செயலாளராக திருமதி ஏ.மேரி றெஜில்டா-யுகசக்தி, பொருளாளராக திருமதி ரி.வித்தியா-FRC ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன்அணெஸ்லியோநியூமன்-FRIDSRO, கே.சிவகுமார்-TASC, திருமதி எஸ்.சந்திரலீலா-அமைதித்தென்றல், எஸ்.பிரகாஷ்-CHID Mullai ஆகியோரையும் உள்ளடக்கியநிர்வாகக்குழுவும்தெரிவு செய்யப்பட்டது.

இத்தெரிவுகள் யாவும் ஏகமனதாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது சிறப்பம்சமாகும்.

அத்துடன் இணையத்தின் யாப்பு உட்பட எதிர்கால நடவடிக்கைகள் என பல விடயங்கள் ஆரோக்கியமான முறையில் கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தை ஒழுங்கு செய்து நடத்தும் பொறுப்பினை FRIDSRO சிறுவர் சிநேக சமூக செயற்றிட்டம் திறம்பட மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-310)




# 'கடனைக் கொடுத்து வாழ்வாதாரத்தை சுரண்டாதே' வவுனியாவில் நுண்நிதி இலகுக் கடன் நிறுவனங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




வவுனியாவில் நுண் நிதி இலகுக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு எதிராக சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பினரால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கில் பெண்களை இலக்கு வைத்து அதிக வட்டிக்கு கடன் வழங்கும் நுண்நிதி இலகுக் கடன் வழங்கும் நிறுவனங்களை மூடுமாறு அரசுக்கு கோரிக்கை ஒன்றை வைத்து இப்போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் நுண் நிதிக்கடன் ஒரு தூக்குக் கயிறு, யுத்தத்தில் துப்பாக்கி நல்லாட்சியில் நுண் கடனா?, கடனைக் கொடுத்து வாழ்வாதாரத்தை சுரண்டாதே, பெண்களுக்கு கடன் திட்டமா? தற்கொலைத் திட்டமா?, நுண் கடன் திட்டம் மீண்டும் அகதி வாழ்க்கையா? என்ற பதாகைகளை தாங்கி நின்றனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தை உலக உணவு தினத்தை முன்னிட்டு காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு ஒழுங்கு செய்திருந்ததுடன் ஆர்ப்பாட்டத்தில் வவுனியாவைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் கலந்து கொண்டிருந்தன. (2-250)

# பொதுக்கூட்டம்

(குருமன்காடு)

வவுனியா விபுலானந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை கல்லூரியின் அதிபர் எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் வளர்ச்சியிலும் துரித அபிவிருத்திப் பணியிலும் பழைய மாணவர்களை உள்வாங்கி. புது உத்வேகத்துடன் கல்லூரியை முன்னணிப் பாதையில் கொண்டு செல்ல அமைதியான முறையிலும் ஆக்கபூர்வமான கருத்துக்களுடனும் புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாக சபையில் தலைவராக கல்லூரி அதிபர் எஸ்.அமிர்தலிங்கம். உப தலைவராக எல்.சுரேந்திரசேகரன். செயலாளராக எஸ்.சுரேந்தர். பொருளாளராக ரி.கார்த்திக். இணைச் செயலாளராக செல்வி எ.திபியா. உப செயலாளராக சாய் பிரசாத் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக 14 பேரும் பிரிவு இணைப்பாளர்களாக 4 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# வவுனியாவில் கால்நடைகளுக்கான வைத்திய சுகாதார நடமாடும் சேவை





(குருமன்காடு)

வடக்கு மாகாண விவசாய, கால்நடை அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியாவில் கால்நடைகளுக்கான வைத்திய சுகாதார நடமாடும் சேவை இடம்பெற்றது.

வவுனியா. சாஸ்திரி கூழாங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் நேற்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது ஆடு. மாடு. நாய் போன்ற கால்நடைகளுக்கான மருத்துவப் பரிசோதனை மற்றும் அவற்றை பாராமரிப்பதற்கு தேவையான மருந்து வகைகள். உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன். வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன். வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம். வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராசா. ம.தியாகராசா. ஜெயதிலக. கால்நடை வைத்திய அதிகாரிகள். பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)



திருநாவற்குளம் உமாமகேஸ்வரன் முன்பள்ளியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் முன்பள்ளியின் ஆசிரியர் திருமதி மீரா குணசீலன் தலைமையில் கல்விக் கண்காட்சி நடைபெற்ற போது... (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

முல்லை. மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்குட்பட்ட

# எட்டு கமநல சேவை நிலையங்களுக்கு நிரந்தர கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 10 கமநல சேவை நிலையங்களில் எட்டு கமநல சேவை நிலையங்களுக்கு நிரந்தர கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாது இருப்பதுடன் முல்லைத்தீவு மாவட்ட ரீதியாக 130 நிரந்தர விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் இல்லாது இருப்பதால் முல்லைத்தீவு மாவட்ட விவசாய அபிவிருத்தியில் பாரிய பின்னடைவுகளை எதிர்கொண்டு வருவதாக பிரதேச மட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடப்பெயர்வின் பின்னரான மீள்குடியேற்றத்தில் இருந்து இன்றுவரை ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 41 ஆயிரத்து 855 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 162 பேர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான், துணுக்காய், பாண்டியன்குளம், ஒலுமடு, முள்ளியவளை, குமுழமுனை, கொக்குத்தொடுவாய், அளம்பில் ஆகிய எட்டு கமநல சேவை நிலையங்களுக்கும் நிரந்தர கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாது உள்ளதால் இவர்களது இடத்திற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவி நிலையில் உள்ளவர்களே தற்காலிகமாக கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள கிராமங்களில் விவசாயிகளின் கடமைகளை முன்னெடுக்க 136 நிரந்தர விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் தேவையாகவுள்ள இடத்து தற்போது ஆறுபேர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

வெற்றிடமாகவுள்ள 130 இடங்களுக்கும் பதில் கடமையாற்றுவதற்கு எந்தவொரு பதில் உத்தியோகத்தரும் நியமிக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வரும் நிலையில் அரச துறைசார்ந்த பிரிவுகளில் உரிய உத்தியோகத்தர்களோ அல்லது அதிகாரிகளோ நியமிக்கப்படாது இருப்பது மக்கள் மத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்விடயத்தில் கவனமெடுத்து உரிய அதிகாரிகளை நியமிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவ வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (2-15)




# கிளிநொச்சியில் இலவச கணனி, ஆங்கில பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது

(பரந்தன்)

கிளிநொச்சி திருநகரில் கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் Think 2wice அமைப்பின் இலவச கணனி மற்றும் ஆங்கில பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேற்படி அமைப்பின் இணைப்பாளர் நடராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல், கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் பத்மநாதன், தினக்குரல் கருணைப் பாலம் சுஜீவன் ஆகியோர் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

லிட்டில் எய்ட் நிறுவனம் கடந்த நான்கு வருடங்களாக தரமான ஆறு மாத கால கணனி கற்கை நெறியை இலவசமாக வழங்கி வருகிறது. இதில் கிட்டத்தட்ட 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

அவர்கள் இன்று மீண்டும் ஒரு கற்கை நெறியாக இலவச ஆங்கில கற்கை நெறியை ஆரம்பித்துள்ளமை இந்த பிரதேசத்திற்கு ஒரு வரப்பிரசாதமே.

அத்தோடு மாணவர்கள் இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என இங்கு உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார். (2-312)

# காலபோக நெற்செய்கை தொடர்பான முன்னாயத்தக் கூட்ட கால அட்டவணை

(மல்லாவி)

முத்தையன்கட்டு நீர்ப்பாசனக் குளத்திற்குட்பட்ட பெரிய நீர்ப்பாசனக்குளங்களின் கீழ் 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் நடைபெறவுள்ள கால அட்டவணையை முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கணுக்கேணி குளத்திற்கான முன்னாயத்தக் கூட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும்.

இதேவேளை முற்பகல் 11.30 மணிக்கு மதவாளசிங்கம் குளத்திற்கான முன்னாயத்தக்கூட்டம் பூதன்வயல் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு நீர்ப்பாசனத்திணைக்களப் பொறியியலாளர்கள், அதிகாரிகள், கமநலசேவை திணைக்களத்தின் பிரதிநிதிகள், விவசாயத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளதால் மேற்படி குளங்களின் கீழுள்ள கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (2-15)

# தகவல் பெறும் உரிமைச்சட்டம் குறித்து மக்களுக்கு தெளிவூட்டல்

(குருமன்காடு)



தகவல் பெறும் உரிமைச் சட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு வவுனியா. ஓவியா விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பில் அறிக்கையிடும் அமைப்பின் நிதிப் பங்களிப்பில் நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான அமைப்பு, ஓகான் நிறுவனம், ஊடக தொழிற்சங்க சம்மேளனம் என்பன இணைந்து தகவல் பெறும் உரிமை தொடர்பான விழிப்புணர்வு கருத்தாடல் நிகழ்வை நடத்தினர். இதில் தகவல் பெறும் உரிமை தொடர்பாக சட்டத்தரணி ஜெகத் வன்னியராச்சி கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார். இதன்போது மக்கள் கேள்விகளுக்கும், தகவல் உரிமைச் சட்டம் தொடர்பில் எழுந்த சந்தேகங்களுக்கும் பதில் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், ஊடக தொழிற்சங்க சம்மேளன செயலாளர் லங்காபேனி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் ஆர்.பிரியதர்சன, யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பில் அறிக்கையிடும் அமைப்பின் ஆசிய பிராந்திய இணைப்பாளர் அலன், அதன் திட்ட இணைப்பாளர் முஹம்மது அசாட், அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள், இளைஞர் கழக உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-250)

# மூத்தோர் சங்க அங்கத்தவர்கள் நன்மதிப்பு நிகழ்வு இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சிவநகர் கிராம மூத்தோர் சங்க அங்கத்தவர்கள் நன்மதிப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் அ. இரகுபதி தலைமையில் நடைபெறும். சிவநகர் கிராமத்தில் வசித்துவந்த அமரர் சாமிநாதன் அப்பையாவின் நினைவுநாள் தொடர்பில் அன்னாரது குடும்ப உறுப்பினர்களின் நிதிப்பங்களிப்புடன் நடைபெறவுள்ள இந் நன்மதிப்பு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன், விசேட விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. நளாயினி இன்பராஜ், சிறப்பு விருந்தினர்களாக கிளி. மாவட்ட பிராந்திய வைத்திய அதிகாரி மா.ஜெயராஜா, கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அலுவலர் வே.தபேந்திரன், கௌரவ விருந்தினர்களாக உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலை வைத்தியர் ச.மு.கோபாலபிள்ளை, கிளிநொச்சி மாவட்ட செயலக முதியோர் மேம்பாட்டு அலுவலர் திருமதி. ச.மயூரி, கரைச்சி பிரதேச செயலக சமூகசேவை அலுவலர் திருமதி. தி.ஆரணி, சிவநகர் கிராம அலுவலர் திருமதி.சா.சுந்தரலிங்கம், சிவநகர் அ.த.க.பாடசாலை அதிபர் ஜ.இராசரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் முதியோர்கள் மற்றும் மூத்தோர் நலம் பேணுவோம் இறுவெட்டு வெளியீட்டுக் கலைஞர்களும் கௌரவிக்கப்படும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (2-254-309)



வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் தீபாவளி தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட இனிய வாழ்வு இல்ல மாணவர்களுக்கு 113000 ரூபா பெறுமதியான புத்தாடைகள் வழங்கி வைக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

(படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# 'கலைகளின் சங்கமம்' கலைவிழா நிகழ்வு

கிளிநொச்சி கூட்டுறவு சங்க கலாசார மண்டபத்தில் கலைவிழா நிகழ்வொன்று "கலைகளின் சங்கமம்" என்ற தலைப்பில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினசரி காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ள இக்கலைவிழாவில் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவுள்ளதால் ஆர்வலர்கள் அனைவரையும் வருகை தருமாறு விழா ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (2-5-303)

**WINGS**

A FESTIVAL OF ARTS

*අපේක්ෂාවේ පියාසැරිය*

*நம்பிக்கையின் சிறகசைப்பு*

கலைத்துவச் செயற்பாடுகள் மற்றும் உருவாக்கங்கள் மூலமாக நல்லிணக்க எண்ணக்கருவை அணுகும் வகையில் நாடு முழுவதிலிமிருந்தான கலைஞர்கள், செய்முறையாளர்கள், எழுத்தாளர்கள், இளையோர்கள் மற்றும் கலைக்குழுக்களினால் வடிவமைக்கப்பட்ட கலைப்படைப்புக்களை காட்சிப்படுத்தும்

**வடபுலத்திலிருந்து ஆரம்பமாகும் தேசியமட்ட பெருவிழா**

# கலைகளின் சங்கமம்

**2016 ஒக்டோபர் மாதம் 21,22,23 ஆம் திகதிகளில்**
**காலை 9.00 மணி தொடக்கம் மாலை 9.00 மணி வரை**
**கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க கலாசார மண்டபம் மற்றும்**
**கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில்**

**தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களின் பாரம்பரிய கலைகள், மேடை நாடகங்கள், சிறுகதை எழுத்தாக்கங்கள், கருத்துக்கள நாடகங்கள், ஆடல், பாடல் மற்றும் நடன ஆற்றுகைகள், திரைப்படக் காட்சிகள், கவியரங்கம், கலைக்கருத்தரங்குகள் மற்றும் ஓவியக்கண்காட்சி போன்ற நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றன.**

**அனுமதி இலவசம்**

விழா பங்குதாரர்கள்:

ජාතික සමගිය හා සංහිඳියා කාර්යාංශය
தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம்
OFFICE FOR NATIONAL UNITY AND RECONCILIATION

European Union
german cooperation
giz
care
YOU CREATE

www.wingssrilanka.com








யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மெய்யியல், உளவியல்துறை மாணவர்களால் உலக உளநல நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட உளவியல் கண்காட்சி நேற்று செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழக கலைப்பீட கீழ்த்தள கட்டடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொண்டார்.
(படங்கள்:-பொ.சோபிகா)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நல்லெண்ணெயின் மருத்துவப் பயன்கள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணத்தின் பண்டைய பாரம்பரிய உணவுப் பழக்கங்களில் நல்லெண்ணெய் முக்கிய இடம் வகிக்கின்றது. அந்த வகையில் நல்லெண்ணெய் தயாரிப்பு தற்காலங்களில் அருகிவருகிறது. பாரம்பரிய முறைகளின் படி நல்லெண்ணெயினை தயாரித்து பயன்படுத்துவதே உடலுக்கு உகந்ததாக அமையும். நவீன இயந்திரங்களை பயன்படுத்துவதாலும் மரத்தளபாட இயந்திரங்கள் தவிர உலோகங்களிலான இயந்திரங்களைப் பயன்படுத்துவதாலும் உற்பத்தி செய்யப்படும் நல்லெண்ணெயினை தரம் மிக்கதாகவும் மருத்துவப் பயன்கள் நிறைந்ததாகவும் தயாரித்துக் கொள்ள இயலாது. ஆகவே செக்கு -உரல் -புளிய மரத்தினாலும் , உலக்கை முதிரை மரத்தினாலும் துலா- இலுப்பை மரத்தினாலும் , கொழுக்கி - பூவரசு மரத்தினாலும் தயாரிக்கப்படும். இவ்வாறு இந்தச் செக்கு இயந்திரத்தினை மாடுகளின் உதவி மூலம் இழுக்கப்படுவதனால் அங்கு வெப்பம் சீராக படிப்படியாக விடுவிக்கப்பட்டு நல்லெண்ணெய் எள்ளு விதைகளில் இருந்து நல்லெண்ணெய் உரிய முறையில் பிரித்தெடுக்கப்படும்.

இம் முறையிலான நல்லெண்ணெய் தயாரிப்பு பிரான்பற்று, நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கு பயன்படும் எள்ளு வயல் நிலங்களில் விளைவது உகந்தது. ஆனால் தற்காலங்களில் தோட்ட நிலங்களில் பயிரிடப்படும் எள்ளு பயன்படுத்தப்படுகிறது. எள்ளில் இரண்டு வகையுண்டு. வெள்ளை எள்ளு, கறுப்பு எள்ளு. ஒரு முறை செக்கிலிருந்து நல்லெண்ணெய் பெற 18-21 கிலோ கிராம் வரையிலான எள்ளு தேவைப்படும்.

இதன் மூலம் 11-13 லீற்றர் நல்லெண்ணெய் பெறப்படும். இந்த நல்லெண்ணெய் இரும்புச் சத்து நிறைந்ததாகவும் , உயிர்ச்சத்து A,E நிறைந்ததாகவும் காணப்படும். நல்லெண்ணெய் தயாரிப்பில் எஞ்சும் பிண்ணாக்கு எள்ளுப் பிண்ணாக்கு எனப்படும். இது புரதச் சத்து நிறைந்ததாகவும், நிரம்பாத கொழுப்பமிலம் உடையதாகவும் காணப்படுவதால் தொற்றா நோய்களின் தாக்கம் உடையவர்கள் இதனைப் பயன்படுத்தலாம்.





கொலஸ்ரோலின் அளவை இரத்தத்தில் கட்டுப்படுத்தும் நல்லெணெய் நோய் அல்லது முதுமையையும் தவிர்க்கும். உயிர்ச்சத்து A யும் B யும் கொலஸ்ரோலைக் குறைக்கும் லெசித்தின் என்ற பொருளும் உள்ளதால் உடலிலும் இரத்தக்குழாய்களிலும் கொழுப்புக் கோளாறு, தொப்பை ஏற்படாது. இளமைத் தோற்றத்துடன் ஆரோக்கியமும் ஏற்படும். நல்லெண்ணெய் நோயை முறிக்கும் முறிவு மருந்தாகும்.

செசாமின் என்ற பொருள் நல்லெண்ணெயில் இருப்பதால் வாதம், இதய நோய் வராமல் முன் கூட்டியே தடுத்து உடல் உறுதியைப் பேணும். நல்லெண்ணெய் நன்கு சூடுபடுத்தி பயன்படுத்தினால் நோய் எதிர்ப்பு தன்மையைக் கூட்டும். வாழ்க்கையில் வெறுப்பு , கவலை , மனச்சோர்வு ஆகியவற்றை தடுக்கும் டைரோரொப்பினால் என்ற அமிலப் பொருளும் நல்லெண்ணெயில் உண்டு.

நல்லெண்ணெய் குளியல்மூலம் தோல் மிருதுவாகிறது. மூலவியாதி, பெண்களின் மாதவிலக்குப் பிரச்சினைகள், தோல்வியாதி உள்ளவர்கள் எள்ளுருண்டையை தவறாது சாப்பிட்டுவரவும். நல்லெண்ணெய் சேர்த்தால் குடலில் $Ca^{++}$, $Po4^{3-}$ சேரிப்பது இலகுவாகும். ஆயுளும், இளமையும் எளிதில் நீடிக்க இந்த எண்ணெயே அருமருந்து

ஒரு பெண் பருவமடைந்தால் பாரம்பரிய நல்லெண்ணெய் 30 மில்லி அளவு தினமும் பருகக் கொடுப்பர். அல்லது கத்தரிப் பிஞ்சை நல்லெண்ணெயிலிட்டு வதக்கிக் கொடுப்பர்.

நல்லெண்ணெய் தேகத்திற்கு பலத்தையும், கண் ஒளியையும் (Vita) ஒளிருக்கும் நல்லெண்ணெயில் Linoleic Acid உண்டு. இது கருப்பை முதலியவைகளின் வளர்ச்சிக்கு மிக அவசியம்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு காயம், சரக்குத் தயாரிக்கும் போதும் நல்லெண்ணெயே கூடுதலாகப் பயன்படுத்தப்படுகிறது.

நல்லெண்ணெயானது தற்போதைய ஆய்வுகளின் முடிவின்படி கெட்ட கொலஸ்ரோலினை நல்ல கொலஸ்ரோலாக மாற்றும் தன்மையுடையதாக கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். நல்லெண்ணெய் விரைவில் கெட்டுப் போகாது .

சித்த மருந்துகளில் பெரும்பாலான தைலங்களில் நல்லெண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. உடலுக்குக் குளிர்ச்சியையும் தரக் கூடியது.

சிவமயம்

# கிளிநொச்சி, பூநகரி, முழங்காவில் 31
# புனராவர்த்தன திவ்விய ஏககுண்ட
# திருக்குடமுழுக்கு நன்னீராட்



### ஆசிச் செய்தி

அன்புள்ளங்கொண்ட குகநேயப் பெருமக்களே!

பேரம்பலம்சுவாமி அவர்கள் எம்மால் தெய்வம் என்றழைக்கப் பட்ட குமாரசாமி ஐயா அவர்களது பூர்வ புண்ணிய பலன் மக்களுக்கு நன்னெறி காட்டும் பல சந்தர்ப்பங்கள் வாழ்நாளில் கிடைத்தமையை நேரே கண்டவன். இவர்களின் சிவப்பணியின் அடை யாளங்களில் ஒன்று முழங்காவில் சின்னக்கதிர்காமம் ஆகும். இன்று ஸ்ரீமுருகன் என்னும் பெயர் கொண் டருள் புரியும் பாலகன் முருகனுக்கு3ஆவதுதிருக்குடமுழுக்குபெருஞ்சாந்திவிழாசிறப்பாக இடம்பெறுவது அறிந்தேன். மக்களின் வாழ்க்கை சுபீட்சமாக அமைய ஆலயங்களே முதன்மை வழிகாட்டி நிலையங்களாக அமைகின்றன. இச்சிவப்பணி ஆற்றிய அனைவரையும் கதிரமலையான் துணை கொண்டு குருபாதம் பணி ந்து வாழ்த்தி ஆசிகூறி அமைகின்றேன்.

கணேசானந்த மகாதேவசுவாமிகள்
பீடாதிபதி, மகாதேவா ஆச்சிரமம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.



### வாழ்த்துரை

பூநகரி முழங்காவில் பதியில் இன்னருளை வாரி வழங்கும் ஸ்ரீமுருகப் பெருமானுக்கு திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா நிகழ்வது அறிந்தேன். மக்களின் வாழ்வியல் மாற்றங்கள் இறையருளாலே தான் நிகழ்கின்றது என்பது முடிந்த முடிவு. அவ்வகையில் மக்கள் இறைவன் மீது நம்பிக்கை வைத்து ஆலயங் களை அமைத்து வழிபாடு செய்து வருகின்றார்கள். கதிர்காமக்கந்தன் அடியவராகிய பேரம்பலச் சுவா மியார் கனவில் தோன்றி முருகன் ஆலய அமைவிடம் சுட்டி, வேல் கொடுத்து, பெயர் சூட்டிய செய்தியை அறிந்தேன். "அவனருளாலே அவன் தாள் வணங்கி" (சிவபுராணம்) என்பதற்கு அமைய பேரம்பலம் சுவாமி யாருக்கு கிடைத்த பேறும் அமைகின்றது. அவரின் வழியை இலங்கைவாழ் மக்கள் பின்தொடர்ந்து நல்வாழ்வு வாழ வேண்டும் என வாழ்த்தி வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பாலசிங்கம் நகுலேஸ்வரன், கிராம சேவை அலுவலர், முழங்காவில்.








### ஆசியுரை

கதிரமலையான் திருத்தாள் போற்றி

மெய்யடியார்களே!

பூநகரி முழங்காவில் பதியில் சின்னக் கதிர்காம கந்தனாக உருக்கொண்டு இப்போது ஸ்ரீமுருகன் என்னும் நாமம் கொண்டு எழுந்தருளி அருள் ஆட்சி புரிந்து வருகின்ற சிவபாலகுமாரருக்கு திருக்குடமுழுக்குப் பெருவிழா நடைபெறுவதை இட்டு பெருமகிழ்வு அடைகின்றோம். மக்களின் உயர்வுக்கு அடித்தளமாக அமைபவை ஆலயங்களேயாகும். ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் உயர்ந்த விழா இவ்விழாவேயாகும்.

இவ்விழாவில் இணைந்து கொண்டு இறைபணி ஆற்றும் ஆலய சேவா சங்கத்தினருக்கும் இக்கிரியைகளை செவ்வனே நிறைவாக்கும் குருமார்களுக்கும் முழங்காவில் பதி மக்களுக்கும் இப்பணி சிறக்க உதவிகள் பல வகையிலும் செய்த அன்புள் ளங்கள் அனைவருக்கும் கந்தன் அருளாசி கிடைக்க பிரார்த் தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்.



### வாழ்த்துச் செய்தி

மெய்யுள்ளம் கொண்டவன் பேரன்புடையவன்- இவற்றுக்கு இலக்கணமாக கூறக்கூடிய பொருளே இறைவன் ஆவான். என எண்ணுவோர் அட்ட மாசித்திகளும் கைவரப் பெற்றவர்கள் சித்தர்களாவார்கள். முற்றறி பெற்றவர்கள் ஞானியர்களாவர். இறைவன் அவர்களோடு நேரே பேசுவான். புராணவ ரலாறுகள் இவற்றை உறுதி செய்கின்றன. குமரகோட்டத்து கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராண அரங் கேற்றம் செய்த போது கச்சியப்ப சிவாச்சாரியாரிடம் வினாக்கள் முன்வைத் தன. ஆதாரப்படுத்த மறுநாள் குமரகோட்டத்து முருகப் பெருமான் சபையில் பிரசன்னமாகி விடைபகர்ந்த வரலாறு இதற்கு எடுத்துக் காட்டான உண் மையாகும்.

ஆலயங்கள் தோன்றும் போது அவை மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுத்துவதற்கு உதவுகின்ற செய்திகளை நாம் அறிய முடிகின்றது. முழங்காவில் பதி ஸ்ரீ முருகன் தேவஸ்தான வரலாறும் அவ்வாறு மக்களுக்கு சேவை செய்யும் ஆலயமாக மாறவேண்டும். ஆலயங்கள் மக்களுக்கு வழிகாட்டியாக செயற்பட வேண்டும்.

ஆலய வழிபாடு மன அமைதி ஏற்பட துணை செய்யும் என்பது உணர்ந்து ஆலய சேவா சங்கத்தினர் சேவை என்பது தன்னலம் கருதாப் பண்புகளை மனிதர்களினாலேதான் செய்ய முடியும் என்பதனை உணர்ந்துள்ளோம். இப்பணி செய்த அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்க இறைபணி வளர்க சமூக நற்பணிகள்.

சிவஞானம் சிறீதரன் ,
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
கிளிநொச்சி-- யாழ்ப்பாணம்.



சைவமும் தமிழும் தழைத்து சீருடனும் சிறப்புடனும் வாழ வழிகாட்டிய நாடு ஈழவள நாடு. இந் நாட்டில் சிவ வழிபாடு மேலோங்கி இருந்தமையை பல சான்றுகளுடாக நிரூபிக்க முடியும். சிவ புத்திரராகிய கந்தப் பெருமானுக்கு முழங்காவில் பதியில் ஞானியர் கள வழித்தோன்றல்களின் வரிசை யில் பேரம்பலச் சாமியார் ஸ்ரீ முருகன் தேவஸ்தானம் என்றும் ஆலயத்தின் மூலவேராக ஆதீனகர்த்தராக அமைந்திருக்கின்றார். இவர் மனித வடிவமாக வந்த அவதார புருசர் ஆவார்.

இவர் மன நம்பிக்கை கதிரமலையானின் இன்னருளுக்கு இலக்கணமானவர் என்பது தெளிவு.

என்னுடைய சிறு பராயத்தில் படையாண்டான் தோட்டம் கிராம்புவில் முருகன் ஆலயத்தை தன்னுடைய உறைவிடமாக கொண்டவர். வேரவில் சிவஸ்ரீ குமாரசாமி ஐயாவின் மூத்த சகோதரி திருமதி சின்னத்தம்பி நாகபூஷணி அம்மாவின் வீட்டிற்கு அடிக்கடி வருகை தருவார்.

காவியுடன் இருந்தவர்கள் மற்றவர்களும் காவியாக நெறிப்படுத்தும் இறைபணியின் அடையாளச் சின்னங்களாகும். சிவ சின்னங்களில் காவி முக்கியம் பெறுவதையுணர வேண்டும். இவ்வகை இறை அம்சத்தின் தோற்றம் திருவருளின் வெளிப்பாடு என்பதுணர்ந்து சிவப்பணியில் நிறைவான பணி ஆலயம் அமைத்து திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவை மக்கள் காண நெறிப்படுத்தலாகும். அதற்கு அமைய இவ்வாலயப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவரையும் பாராட்டுவதுடன் அனைவருக்கும் இறையாசி கிடைக்க ஆசியுரை வழங்குவது அவனரு ளேயாகும்.

பிரதிஷ்டா பிரதம குருக்கள் சிவஸ்ரீ
விக்கினராஜக்குருக்கள், பாலகுமாரக் குருக்கள்,
சாவகச்சேரி.



### ஆசிச்செய்தி

கந்தப்பெருமானடி போற்றி

குகநேயச் செல்வர்களே!

கந்தன் திருத்தாள் பணியும் மெய்யுள்ளம் கொண்டவர்களின் அறப்பணியே ஆலயம் அமைத்து திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாக்காணும் இன்றைய அருள் நாளாகும். முழங்காவில் பதியின் சிறப்புக்கு இங்கு அமைந்துள்ள தெய்வமூர்த்தங்களே காரணமாகும். ஆலய ங்கள் மக்களை நன்னெறிப் படுத்துவதில் முதன்மை பெறு கின்றன. ஆலயம் அமைத்து பெருஞ்சாந்தி விழாவை நிகழ்த் தும் சிவப்பணி செய்ய சந்தர்ப்பம் கிடைத்தமை மனிதப் பிறவி யின் பெரும்பேறாகும். எல்லோருக்கும் இவ்வரிய வாய்ப்புக் கிடைப்பதில்லை.

சிவ புண்ணிய காரியம் நிகழ்த்தும் பெருந் தொண்டர்கள் பணி மென்மேலும் சிறப்புற அமைய கந்தனருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்தனை செய்வது நம் அனைவரின் தலையாய கடமையாகும். கந்தனருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்தனை செய்து ஆசி கூறி அமைகின்றேன்.

அன்பே சிவம்
சின்மயா மிசன் ஜாக்கிர சைதன்யா


முழங்காவில், நாச்சிக்குடா சந்தி வர்த்தக சங்கங்கள் சார்பாக வா












# ...ஆம் கட்டை ஸ்ரீ முருகன் தேவஸ்தான
# ...ட பக்ஷ மஹா யாக அஷ்டபந்தன
# ...டு பெரும்சாந்தி விழா-2016

### ஆலயத்தை நெறிப்படுத்துநர்களின் உள்ளத்தில் இருந்து

...ழங்காவில் பதியில் நாவல் மரத்தடியை தன்வாழ்விடமாக்க எண்ணினான். வள்ளியை ...புணர கதிர்காமம் வந்தவன் கந்தன்- மாம்பழம் கிடைக்காத காரணத்தால் பழனிமலை ...டைந்தவன். சுவாமிமலையில் தந்தையாகிய பரமசிவனுக்கு பிரணவ மந்திரத்தின் ...பொருளை உணர்த்தியவன். இவ்வாறு திருவிளையாடல்களை புரிந்தவன் எம்மை ...கத்தே அவன் ஆட்கொள்ள வேண்டுமென்றால் அவன் அவ்வப்போது தோன்றுவான் ...புரிவான். அந்த வகையாக 2011 ஆம் ஆண்டு நூறு மாதம் எங்களைத் தன் பணிக்கு ...த்திக்கொண்டான். பொறுப்புகள் பல எம்மிடம் தந்தான். அவ்வகையில் அவன் எமக்கு ...நாட் கல்லு வைத்தல் தொடங்கும். சிற்பக் கலைஞர்களின் தொடர்பாடல், ஏனைய கலை ...ரின் தொடர்பாடல்கள், திரவியம் தேடும். தொடர்பாடல்கள் எல்லாவற் றையும் எமக்கு ...ளத்த தன்மை தனிமையாக இருந்து எண்ணும்போது அபூர்வமாக தோன்றுகின்றது.

...து ஆண்டுகள் அளவில் திருப்பணி வேலைகள் நடந்தன. எல்லோரும் பூரணமாக ஒத்து ...னார்கள். வழிப்படுத்தியுள்ளார்கள். கட்டட மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய திருப்பணி ...லைகளை செய்வதற்கு முருகன் முன்னின்று நகர்த்தியது என்பது உண்மையே ஆகும். ...சரத்தினம் பஞ்சலிங்கம் பெரியண்ணை என்னும் திருப்பணியாளர் பிள்ளையார் ... அமைப்பைப் பொறுப்பேற்றது முதற்பெரிய திருப்பணி என்பது எம் உணர்வாகும். எவ்வாறேனும் துர்முகி வருடம் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவை நிறைவாக்க ...டும் என்ற வேண்டுகோளுடன் எம்முடன் தொடர்ப்பை ஏற்படுத்துவார். அனைத்து ...கப் பெருமக்கள் பொதுமக்கள் அனைவரும் ஒரே எண்ணம் கொண்டவர்களாக மாற ...தவர் ...ருகன். கட்டட அமைப்பாளர், மின்னிணைப்பு, கூரைவேலை, கதவுவேலை, ...க்கின்று ஏனைய வளாகங்களை சீர் செய்த காலம் குறிப்பிட்ட சில நாட்களில் ...ாகவும் விவேகமாகவும் எம்மைக் கொண்டு முழுக்க முன்னின்று நெறிப்படுத்தினார் ...து எமக்கு எண்ணும் போது தனியான ஒரு உணர்வு தென்படுகின்றது.

...நக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவைச் செய்ய எண்ணியபோது குறுகிய 20 நாட்களில் ...ணிகள் நடந்தன. கிரியைகளை நெறிப்படுத்த உரியவர்களைத் தெரிவு செய்ய ...ரின்ற முருகனை என்னென்று எண்ணுவது. நன்னீராட்டு விழா சிறப்பு அமைய ...ழைத்த அனைவரையும் எண்ணிப் பார்க்கின்றோம். எம்மை அறியாது ஒரு உணர்வு ...ப்படுகின்றமை உணர முடிகின்றது. இறையருள் கைவரும் போது எண்ணங்கள் ...த நிறைவாகும் என்பது இச் செயலூடாக உணர முடிகின்றது. எமக்கு வழிகாட்டிகளாகத் ...த அனைவரையும் எண்ணிப் பார்த்து அகமகிழ்வடைய முருகன் வைத்துள்ளார். எமக்கு ...ார் சிவப்பணியாற்றிய ஆலய சேவா சங்கத்தினர், அடியார்கள் அனைவரையும் ...ுகின்றோம். அவர்கள் பணி இன்று இவ்வாலயத்தின் அடித்தளங்களாக அமைந்துள் ..., அவர்கள் சென்ற பாதை எம்மை சிறப்பாக செயற்பட வைத்துள்ளது என்பது எமது ... சார்ந்த உணர்வாக தென்படுவதைக் கூறுவதில், அகமகிழ்வடைவதும் அனைவருக்கும் ...ருள் கிடைக்க பிரார்த்தனை செய்து, கதிரமலையான் கருணைக்கடலின் கழல் அடியை ...ி எண்ணி இறைஞ்சுகின்றோம்.

அருள்மிகு ஸ்ரீமுருகன் தேவஸ்தானம்
அடியார்க்கடியாராகவிருந்து அருட்பணியாற்றிய அடியார்க்கெளியர்.



### குடமுழுக்கு வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலக பிரிவில் உள்ள முழங்காவில் 31 ஆம் கட்டை பிரதேசத்தில்கோயில்கொண்டு அருள் பாலிக்கும் ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தில் 3 ஆவது திருக்குடமுழுக்கு இடம்பெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படும் இவ்வாலயமானது முருகன்,வள்ளி, தெய்வானை சமேத மூலமூர்த்தியாகக் கொண்டு அமைந்துள்ளது. இவ்வாலயத்திற்கும் கதிர்காமத்திற்கும் தொடர்பு காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும். ஆரம்பத் தில் இவ்வூர் மக்கள் நாவல் மரத்தடியில் வேலினை வைத்து வழிபட்டு வந்தனர். பின்னர் முருகப் பெருமானுக்கு ஆலயம் அமைக்க வேண்டுமென ஆரம்பத்தில் சிறிதான ஆலயம் அமைத்து வழிபட்டனர். இன்று மக்கள் ஒன்றுபட்டு பிரமாண்டமான கட்டட வேலைப்பாடுகளுடன், ஆலயத்தை அமைத்து திருக்குடமுழுக்கு நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாலய கும்பாபிஷேகத்திற்கு முன்னின்று உழைத்த ஆலய பரிபாலகர் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதோடு இச்சிவப்பணியாற்றிய மக்களுக்கு முருகப் பெருமான் என்றும் அருள்பாலிப்பாராக.

திரு. சி.ச. கிருஸ்ணேந்திரன்
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், பூநகரி.

### வாழ்த்துச் செய்தி



ஓம்ஸ்ரீ கதிரமலையானடி போற்றி

பரம் பொருள், மெய்ப்பொருள், மங்கலகரமான பொருள், அறிவுள்ள பொருள் சர்வ வல்லமையுடைய பொருள் எங்கும் பரந்தும் வியாபித்தும் நிற்கும் பொருள், சுயம் பிரகாசமான பொருள் என்றுணர்ந்து வாழ்பவர்களே ஞானியர்களாக காட்சி கொடுப்பவர்களாவார்கள். முற்றறி பெற்று இறை இன்பம் பெறும்பாக்கியம் அவர்களுக்குநிறைவாகும்போது அவர்கள் பெயர் அழியாது இருப்பதற்கு இறைவன் பலதிருவிளையாடல்களைச்செய்வான். அத்திருவிளையாடல்களில் ஒன்று இன்று திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருஞ்சாந்தி விழா நிறைவாகுவது இக்கைங்கரியத்தின் வெளிப்பாடாகும். இப்பெரும் திருவிளையாடலை உருவம் கொடுத்து ஆலயம் அமைத்து மக்களின் நல் வாழ்க்கைக்கு வழிகாட்டியவர்கள் தொண்டர்களேயாவர்.

தொண்டர் என்போர் பலன் கருதாது பணியாற்றுபவர்களாவர். அவ்வகை பெரியண்ணா என்றழைக்கப்படுபவர் பல தெய்வீக அனுபவங்கள், குடைச்சாமி போன்ற சித்தர்களினூடாக பல களம் கண்டவர். அவரின் நெறிப்படுத்தலுடன் ஆலய சேவா சங்கத்தினரின் அளப்பரிய பணிபோற்றப்பட வேண்டியதாகும்.

இறைபணி, பெரும்பணி, நற்பணி, சிவப்பணி, அறப்பணி என்றுணர்ந்தார்கள். இன்று திருவருள் பொலிவு பெறும் ஆலயமாக மிளிர்ந்து திருக்குட முழுக்கு நன்னீராட்டு பெருஞ்சாந்தி திருவிழாவைக் காணும் பெரும்பேறும் அவனருளாலேயாகும் என்ற உணர்வுடன் வாழ்த்தி ஆசி கூறுகின்றேன். வீரகத்திப்பிள்ளையார் துணையுடன் குருபாதம் பணிந்து அகமகிழ்வு அடைவதுடன் அவன் அருளேயாகும் வாழ்த்துகின்றோம்.

*மேன்மை கொள் சைவநீதி*
*விளங்குக உலகமெல்லாம்.*

சிவஸ்ரீ குமார் சுமுகலிங்கம் ஹரீருவரதன் ஐயா
வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப்பிள்ளையார்
தேவஸ்தானம், பிரதமகுரு, சுபீட்வாசும் ஐயப்ப குருசாமி

### ...லய வரலாற்றுச்சுருக்கம்...

...ான்... வெளி வேரவில் பூநகரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பேரம்பலச் சாமியார் கதிர்காம யாத்திரை தவறாது செய்து வருபவர். ...டைய வாழ்க்கைக் காலத்தில் தியானம் புராணப் படனம் என்பவற்றை தவறாது சிரமேற்கொள்பவர். காவியுடை தரித்துக் கொண்டு ஆலயங்களில் ...டைய காலத்தைச் செலவிடுவார். இவர் 1977 ஆம் ஆண்டு கதிர்காம யாத்திரை சென்ற போது தரிசனத்தில் முருகன் தோன்றி, சின்னக்கதிர்காமம் ...ம் பெயருடன் ஆலய அமைவிடமாக முழங்காவில் பதியை அடையாளம் காட்டினார். திருமுருகன் வேல் ஒன்றை கையிலே கொடுத்து மறைந்தார். ...வேலை தனது சகோதரர் கதிரவேலு குமாரசாமி பூசகர் ஐயா கொண்டு வந்து காண்பித்து நடந்தவற்றைக் கூறினார். பேரம்பலச் சாமியாரின் ... முயற்சியால் இப்போதைய முருகன் கோவில் அமைவிடத்தை தெரிவு செய்து 5 ஏக்கர் காணியை பெற்றுக் கொண்டார். காணியைப் பெறுவதற்கு ...இராசநாயகம் அவர்கள் பேருதவி புரிந்துள்ளார். 1979 ஆம் ஆண்டு காடு வெட்டும் பணியில் திரு. ஆ.திருமாள் அவர்களுடன் அமரர்களான ...னிக் தம்பிப்பிள்ளை தர்மலிங்கம் ஆகியோர் இணைந்து செய்து முடித்தார்கள். கிடுகுப் பந்தல் போட்டு கருங்கல் பிள்ளையார் ஒன்றை செய்து ...மிருந்த வேலையும் கருங்கல் பிள்ளையார் ஒன்றையும் செய்து சீமெந்து மேடை போட்டு சகோதரர் குமாரசாமி ஐயாவை கொண்டு வைப்பித்தார். ...வ வழிபாட்டு முறை பின்பற்றினார்கள். 1981 ஆம் ஆண்டு குமாரசாமி ஐயாவின் பிள்ளைகள் முழங்காவில் காணியைப் பெற்றுக் கொண்டனர். ...லச் சாமியார் அக் காணியில் வந்து தங்கி இருக்கத் தொடங்கினார். அக் கோயில் பராமரிப்பையும் ஒப்படைத்தார். 3 மண்குடம், 2 மண் சட்டி, ஒரு ...கிடுகு, ஒரு ஓலைப் பாய் என்பவற்றையும் ஒப்படைத்தார். காணிக்குரிய கடிதம், கோயில் பெயரின் கடிதத் தலைப்பு என்பவற்றை காண்பித்தார். ...ற கிளிநொச்சி குருகுலத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கூறினார். காலங்கள் செல்ல அவருடைய உடல் நிலையும் தளர்ந்தது. தன் இறுதிக் ...தை குருகுலத்திலேயே கழித்து விட்டார்.

...85 ஆம் ஆண்டு குமாரசாமியின் மகன் யோகராசா நோய்வாய்ப்பட்டார். குமாரசாமி அம்மாவின் கனவில் முருகன் தோன்றி ஆலயம் அமைத்துத் தரும் படி ...கொண்டார். அதற்கு அமைவாயிடபரத்தநத்திந்த யோகராஜவும் அவர்களுடைய சகோதரர்களையும் இணைந்து பணியைத் தொடங்கினர். S.M பொன்னம்பலம், ...ல், ஏரம்பமூர்த்தி ஓவசியர், மெக்கானிக் தம்பிப்பிள்ளையர், மெக்கானிக் சேகர் ஆகியோர் இணைந்து சதுர உதவி பொருள் உதவி என்பன ...ார்கள். திருமாள் அவர்களும் பொன்னம்பலம் அவர்களும் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்றும் அதற்கு உரிய மூர்த்திகளை செய்ய வேண் ...றும் விடாப்பிடியாக நின்றார்கள். அதற்கு அமைய வைரவர், மயூரம் பலிபீடம் எழுந்தருளி வேல் பிரதான வேல் பிரதான செய்து கும்பாபிஷேகத்தை நடத் ...ன். தொடர்ந்தும் உருத்திரா ஏரம்ப மூர்த்தி திருமால் பொன்னம்பலம் போன்றோர் அயரா முயற்சியால் 1996 ஆம் ஆண்டளவில் இரண்டாவது கும்பாபி ... முருகன் வள்ளி தெய்வானை சமேதராக மூலஸ்தானத்தில் செய்து வைத்தார்கள். நாட்டில் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஐம்பொன் விக்கிரங் ... வள்ளி தெய்வானை முருகன் வேல் பாதுகாப்பதில் பல சிரமங்களைச் சந்தித்தார்கள். 2003 ஆம் ஆண்டு நாட்டின் அகால நிலையினால் ஆலயம் ...து. 2011 ஆம் ஆண்டு இப்போதைய நெறிப்படுத்துநர்கள் ஆலயத்தை பொறுப்பேற்று கடந்த 5 வருடங்களாக திருப்பணிகளைச் செய்து இன்று ...டமுழுக்கு காணுகின்ற ஆலயமாக சிறப்புப் பெறுகின்றது. முழங்காவில் வாழ் மக்கள், ஜெயபுரம் வெள்ளாங்குளம் குமுழமுனை நாகபடுவான் ...ந்து மக்களும் அனைத்து வர்த்தகர்களும் விவசாயிகளும் தங்கள் ஆலயமாக எண்ணி வழிபட்டு வருகின்றார்கள். அவ்வாறே அவர்கள் வழிபட்டு ...ருகன் அருள் புரிவாராக ..
(ஈழவூரான்)

...ச வாழ்த்துவோர்

சந்நிதி முருகன் எலக்றிக்கல்
TP: 077 229 7248
077 336 0091
இல. 09, நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.

...வேலன் சேவை
...ELAN SEVAI
மன்னார் வீதி, முழங்காவில்.

விநாயகர் எலற்றிக்கல்ஸ்
அன் மல்ரி சொப்
Vinayagar Electricals & Multi Shop
0777 990070
077 0857376
A32 மன்னார் வீதி, முழங்காவில்.

யாழ். பல்பொருள் வாணிபம்
YAL MULTI SHOP
மன்னார் சாலை, நாச்சிக்குடா, முழங்காவில்.
Mannar Road, Nachchikkuda, Mulankavil.
TP.No. 021 320 8678

மகேந்திர கட்டட நிர்மாணதாரர்
கரியாலை நாகபடுவான் முழங்காவில் மற்றும் அகத்தியன் மின்னொட்டு நிலையம்
நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.
தொலைபேசி:- 076 696 6279

# கடைசி மன்னர் மரணம்



(வோஷிங்டன்)

ருவாண்டாவின்கடைசிமன்னர், கிகேலி வி நாதின் துர்வா, அமெரிக்காவில் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை காலமானார். கிழக்கு ஆபிரிக்க நாடுகளில்ஒன்றான ருவாண்டாவில், கடந்த, 1959இல், மன்னராக முடிசூடியவர்.

1961இல் மன்னராட்சி ஒழிக்கப்பட்டதன் காரணமாக நாட்டைவிட்டுவெளியேறவேண்டிய கட்டாயத்திற்கு, கிகேலி தள்ளப்பட்டார். இதன்பின், கிழக்கு ஆபிரிக்கா, கென்யா மற்றும் உகண்டாவில் தஞ்சமடைந்த கிகேலி, இறுதியாக, 1992இல், அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தார். வோஷிங்டனின் புறநகர் பகுதியில், தன் இறுதிக் காலம்வரை இருந்தார்.

உடல் நலக் குறைவு காரணமாக, கிகேலி இறந்ததாகவும், அவரது இறுதிச் சடங்கு குறித்து, விரைவில் அறிவிக்கப்படும் என்றும், ருவாண்டா நாட்டு வலைத்தள அறிக்கையில் கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# அலெப்போ மீதான தாக்குதல்

# போர்க்குற்றம்

## ரஷ்யாவிற்கு ஐரோப்பிய யூனியன் எச்சரிக்கை

(அலெப்போ)

சிரியாவின் அலெப்போ நகர் மீது ரஷ்யா மற்றும் ஜனாதிபதி ஆசாத் படைகள் தாக்குதல் நடத்தினால், அது போர்க்குற்ற நடவடிக்கையாக கருத்தப்படும் என்று ஐரோப்பிய யூனியன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிரிய ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான அரசு படைகள் மற்றும் ரஷ்யாவின் படைகள்இணைந்துஅலெப்போ நகர் மீது வான்வெளி தாக்குதல்களை நடத்தி வருவதற்கு ஐரோப்பிய யூனியன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யா மற்றும் சிரிய அரசின் இந்த தாக்குதல் ஒரு போர்க்குற்ற நடவடிக்கையாக கருதப்படும் என்றும் ஐரோப்பிய யூனியன் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐரோப்பியன் நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாடு லக்ஸம் பேர்க் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் 28 நாடுகளை சேர்ந்த அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

சிரிய அரசுக்கு எதிராக கூடுதல் பொருளாதாரத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இந்த கூட்டத்தின் போது எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான அரச தரப்பு படைக்கும் கிளர்ச்சியாளர்கள்படைக்கும்இடையே கடந்த சில ஆண்டுகளாகவே தாக்குதல் நடைபெற்று வருகிறது.



இதில் ஜனாதிபதி ஆசாத்திற்கு ஆதரவாக ரஷ்ய படைகள் வான்வெளி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஏமனில் 72 மணிநேர போர் நிறுத்தம்

## ஐ.நா. அறிவிப்பு



(சனா)

போரினால் பெரும் சீரழிவுகளை எதிர்நோக்கிவரும் ஏமனில் நாளை வியாழக்கிழமை முதல் 72 மணிநேர போர் நிறுத்த உடன்படிக்கை அமுல்படுத்தப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள்சபையின்சிறப்பு தூதுவர் அறிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்தும் நடவடிக்கை குறித்து ஏமன் நாட்டின் அனைத்து கட்சிகளின் உத்தரவாதம் பெறப்பட்டுள்ளதாகவும் சிறப்பு தூதுவர் இஸ்மாயில்ஓல்ட் ஷீக்அஹமட் தெரிவித்துள்ளார்.

ஏமன் தலைநகர்சனாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக யேமன் ஜனாதிபதி அப்த் ரபு மன்சூர் ஹாதியின் அரச படைகள் போரிட்டு வருகின்றன.

அண்மையில் சனாவில் இடம்பெற்ற இறுதிச் சடங்கொன்றின் போது சவுதி விமானத் தாக்குதலில் சுமார் 150 பேர் கொல்லப்பட்டனர். குறித்த சம்பவம் சர்வதேசத்தின் கவனத்தையும் பெரிதும் ஈர்த்திருந்த நிலையிலேயே தற்போது போர் நிறுத்த உடன்பாடு குறித்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யேமனில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் இடம்பெற்றுவரும் மோதல்களில் சுமார் 7 ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டுள்ளதுடன், 35 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

அதேவேளை சுமார் 3 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# ட்ரம்ப் பண்பானவர்; பெண்களின் குற்றச்சாட்டை ஏற்க முடியாது

## மனைவி மெலேனியா மறுப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிடும் டொனால்ட் ட்ரம்ப் பண்பானவர்.

ஆனால் சில பெண்கள் அவர் மீது பொய்யான பாலியல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர் என அவரது மனைவி மெலேனியா ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் பெண்கள் குறித்து கீழ்த்தரமான கருத்துக்களை முன்வைத்ததாகவும் அவை காணொலியில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படும் தகவல்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கைகளானது ட்ரம்ப் மீதான மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்வதாக அமைந்துள்ளது.

குறித்த காணொலிவெளீட்டினால் பல குடியரசுக் கட்சியினர் ட்ரம்பிற்கான ஆதரவை துண்டித்துள்ளனர்.

அதேவேளை, பல பெண்கள் ட்ரம்ப் மீது பாலியல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

ஆனால் அவற்றை எனது கணவர் நிராகரித்துள்ளார்.

அவர் பெண்களை மதித்து செயற்படுபவர் என்பதை நான் நன்கு அறிவேன்.

அவர் அன்பானவர் என்பதுடன், பண்பானவர் என்றும் மெலேனியா ட்ரம்ப் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாகிஸ்தானை பகிரங்கமாக ஆதரித்து குரல் கொடுத்த சீனா

(பீஜிங்)

தீவிரவாதத்தின் தாயகமாக பாகிஸ்தான் திகழ்கிறது என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ள நிலையில், சீனா அந்நாட்டுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்திருப்பது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பீஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய சீன வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் குவாஸ் அன்யூ தீவிரவாதத்துடன் எந்த நாட்டையும் தொடர்புபடுத்துவதை சீனா விரும்பவில்லை என்று கூறியுள்ளார்.




இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளுமே தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டது என்று கூறியுள்ள அவர், தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் பல தியாகங்களை பாகிஸ்தான் செய்துள்ளதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

சீன ஜனாதிபதி கலந்து கொண்ட பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பாகிஸ்தானை மோடி கடுமையாக சாடிய அடுத்த நாளிலேயே சீனா இவ்வாறு கூறியுள்ளது.

மசூத் அசாரை பயங்கர தீவிரவாதியாக அறிவிக்க வேண்டும், என்.எஸ். ஜியில் சேர்வதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்ற மோடியின் கோரிக்கைகளையும் சீனா நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தனியார் வைத்தியசாலையில் பயங்கர தீ; 23பேர் மரணம்!



இந்தியாவின் ஒடிசா மாநிலத்தின் புவனேஷ் வரில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து 10 தீயணைப்பு வாகனங்களில் 120 வீரர்கள் போராடி தீயை அணைத்தனர்.

இந்த தீ விபத்தால், 2 ஆவது தளத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த 23 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி டுவீட்டரில் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

தற்போது தீ பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் குறித்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 120 இற்கும்மேற்பட்ட நோயாளிகள்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)

# வடக்கு நிலைமைகள் குறித்து மோடிக்கு விபரித்தார் மைத்திரி

(கொழும்பு)

**வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கிக் கூறியுள்ளார்.**



கோவாவில் இந்தியப் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, மீனவர்கள் பிரச்சினைக்கு உறுதியான தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அதற்கு இந்தியப் பிரதமர் இணங்கியதுடன், நீண்ட காலமாக நீடித்து வரும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வை எட்ட வேண்டும் என்றும் குறிப்பிட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் விகாஸ் ஸ்வரூப் தெரிவித்தார்.

அதேவேளை, தென் மற்றும் மேல் மாகாணங்களில் நோயாளர்களுக்கு உதவும் நோக்கில் இந்திய அரசாங்கம் நோயாளர் காவு வண்டிகளை வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்ட ஜனாதிபதி ஏனைய மாகாணங்களுக்கும் இந்தச் சேவையை விரிவுபடுத்த உதவுமாறும் இந்தியப் பிரதமரிடம் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பில் வடக்கில் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாகவும் இந்தியப் பிரதமரிடம் ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார். (இ-7-10)

# •நிதி நகரத்திட்டத்திற்கு எதிர்ப்புகள் வந்தாலும் பணிகளை நிறுத்தோம்

## சம்பிக்க ரணவக்க சவால்



(கொழும்பு)

போராட்டங்கள் எந்த ரூபத்தில் வந்தாலும் கொழும்பு நிதி நகரத்தின் நிர்மாணப் பணிகளை நிறுத்தப் போவதில்லை என்று மேல் மாகாண அபிவிருத்தி மற்றும் மெகா பொலிஸ் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க சூளுரைத்துள்ளார்.

சீன அரசாங்கத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படுகின்ற இந்தத் திட்டத்தினால் எவருக்காவது நட்டம் ஏற்பட்டால் அதற்குப் பதிலாக நட்டஈடு பெற்றுக்கொடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு நிதி நகரத்தின் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்துமாறு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் புத்தளம் - கொழும்பு பிரதான ரயில் பாதையை இடைமறித்த மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதுமட்டுமன்றி சிலாபம் - கொழும்புக்கு இடையிலான மாற்றுப் பாதையையும் மீனவர்கள் மறித்து எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் நிதி நகரத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டதோடு நீர்கொழும்பு கடற்பகுதியில் மணல் அகழ்வு செய்யும் அரசாங்கத்தின் திட்டத்திற்கும் தங்களது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்நிலையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிடம் இதுதொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க, கொழும்பு நிதி நகரத் திட்டத்திற்கு எந்த எதிர்ப்பலைகள் எழுந்தாலும் அவற்றை சமாளித்து தொடர்ந்தும் இத் திட்டத்தை முன்னோக்கி நகர்த்துவதாகவும் தெரிவித்தார். (இ-7-10)

# பிரதம நீதியரசரின் வசம் நிர்வாகம் இருக்கவில்லை

## சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் ஆகியோர் வெளிநாடு சென்றிருந்த நிலையில், பிரதம நீதியரசர் சிறீபவனே இலங்கை அரச நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்ததாக வெளியான தகவலை சபாநாயகர் மறுத்துள்ளார்.

ஒரே நேரத்தில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெல்ஜியத்துக்கும் சபாநாயகர் கருஜெயசூரிய சீனாவுக்கும் பயணம் மேற்கொண்டிருந்த நிலையிலேயே, நாட்டின் நான்காவது நிர்வாகத் தலைமைப் பொறுப்பில் உள்ள பிரதம நீதியரசரிடம் அரச நிர்வாகம் பொறுப்பளிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

ஜனாதிபதி நாட்டில் இல்லாவிடின் பிரதமரும்; ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டில் இல்லாவிடின் சபாநாயகரும்; இவர்கள் மூவரும் நாட்டில் இல்லாவிடின் பிரதம நீதியரசரும் அரச நிர்வாகத்தை பொறுப்பேற்று நடத்த முடியும்.



அந்த வகையிலேயே பிரதம நீதியரசர் அரச நிர்வாகத்தைப் பொறுப்பேற்றிருந்ததாகக் கூறப்பட்டது.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெல்ஜியத்துக்கும் புறப்பட்டுச் செல்ல முன்னரே தாம் நாடு திரும்பி விட்டதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க கடந்த 16 ஆம் திகதி அதிகாலை 3.15 மணிக்கும் மைத்திரிபால சிறிசேன அன்றிரவும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றிருந்தனர்.

எனினும் கடந்த 15 ஆம் திகதி அதிகாலை 5.50 மணியளவிலேயே சீனாவில் இருந்து தாம் நாடு திரும்பி விட்டதாக சபாநாயகர் கருஜெயசூரிய அறிவித்துள்ளார். (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### பார்வைகள் – பழுதுகள்

பார்வைகள் குணத்தைக் காட்டிக் கொடுத்து விடக் கூடியவை என்பது பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. நம் மனத்தில் பல விகாரங்கள் இருக்கக் கூடும். அவற்றைப் பார்வைகள் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது என்பதில் கொஞ்சம் கவனம் வேண்டும்.

சிலர் தங்களுக்கு வேண்டியவர்களின் வீடுகளுக்குப் போய் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே, கதவின் வழியாகத் தெரியும் பகுதிகளில் உள்ளே நடமாடும் நபர்களையோ உள்ள பொருட்களையோ இரகசியமாகப் பார்ப்பார்கள். இது சம்பந்தப்பட்டவரின் கவனத்தையும் திசை திருப்பும். இந்த ஆசாமி என்னத்தை இப்படி உள்ளே பார்க்கிறார் என்று தானும் திரும்பிப் பார்ப்பார்.

ஆண்கள் பெண்களைப் பார்க்கவும் ,பெண்கள் ஆண்களைப் பார்க்கவும் ஓர் இரகசியப் பார்வை வைத்திருக்கிறார்கள். இது வயது வித்தியாசமின்றி மாற்று இனக் கவர்ச்சியால் ஏற்படுவதுண்டு. ரயிலில், பேருந்தில் சக பயணிகளைப் பார்க்கச் சிலர் ஓரப் பார்வைகளையும் அந்தரங்கப் பார்வைகளையும் வைத்திருக்கிறார்கள்.

சிலர் எதையாவது ஒன்றைப் பார்த்துக் கொண்டே மற்றவர்கள் நம்மைக் கவனிக்கிறார்களா? என்றும் கண்களை மேயவிடுவார்கள். ஆமாம் பார்க்கிறார்கள் எனத் தெரிந்ததும் சட்டெனப் பார்வையை மாற்றிக் கொள்வார்கள். சிலர் இதில் சுதாரிப்பு இல்லாமல் செயற்பட்டு, சம்பந்தப்பட்டவர்களைப் பார்த்து அசடு வழிவார்கள்.

இன்னொரு வகையினர் இருக்கிறார்கள், இவர்கள் அவசியமற்றதையெல்லாம் உற்றுப் பார்த்தபடி இருப்பார்கள்.

வேறு சிலர் ஒரேநேரத்தில் இரண்டு நடவடிக்கைகளைப் பார்ப்பார்கள். இதுவும் திருட்டுப் பார்வையைச் சேர்ந்ததே.

இப்படிப்பட்ட பலவகை அநாகரிகப் பார்வைகள் நம்மைப் பற்றிப் பிறர் தவறாக நொடியில் முடிவு செய்துவிடச் செய்யும்.

அதோ பார்... இங்கே பார் என்று உள் மனதில் உள்ள விகாரங்கள் நம்மை விரட்டும் போது ,அடச் சீ ! சும்மா இரு ! என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டு அதைக் கட்டுப்படுத்த வேண்டும். பார்வை நேரானதாக மட்டுமின்றி , நேர்மையானதாகவும் இருக்க வேண்டும். நம் பார்வை நமக்குக் களங்கம் கற்பிப்பதாகவோ நம்மைப் பற்றிப் பிறர் தவறாக எடைபோட வாய்ப்புத் தந்து விடுவதாகவோ அமைந்து விடக் கூடாது.

நம் இரகசியப் பார்வைகளை யார் கவனிக்கப் போகிறார்கள் என்ற நினைப்பை உதறிவிட்டு ,நாம் எப்போதும் யார் பார்வையிலேயே இருக்கிறோம் என்கிற உணர்வை ஏற்படுத்திக் கொள்வது நன்மை தரும்.

பிறர் பேசுவதைக் கவனிக்க வேண்டும் என்றால் காதை மட்டும் தீட்டிக் கொள்ளலாம். கண்களால் பார்க்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை.

நம் எதிரே அமரும் சக பயணியை ஏன் இரகசியப் பார்வை பார்க்க வேண்டும்? நேரடையாகப் பார்க்கலாமே! தவறில்லை.

பிறர் நம்மைக் கவனிக்கிறார்கள் என்பதற்காக அவசரப்பட்டு பார்வையை மாற்ற வேண்டியதில்லை. மாற்றினால் தவறு. இயல்பாகவே பார்வையை மாற்றலாம். தவறில்லை. பார்வைகளில் இருந்து பழுதுகள் களையப்பட வேண்டும். காரணம் , அவை பண்பாட்டின் விழுதுகள்!

**லேனா தமிழ்வாணன்**





# இனிப்பா? உப்பா?

ஒரு பக்கம் உப்பு மூட்டை மூட்டையாக அடுக்கப்பட்டிருந்தது. மறு பக்கம் சக்கரை மூட்டைகள் இரண்டும் ஈரக்கசிவோடு இருந்தன.

பெரியநாயகம் தலையில் வைத்துக் கொண்டு கவலையோடு இருந்தார். காரணம் ஈரக்கசிவான மூட்டைகளை எப்படி விற்பதென்றுதான். இதைப்பார்த்த அவர் நண்பர் ராமலிங்கம் ' என்ன பெரியநாயகம்! ஏன் கவலையாயிருக்கே என்ன சமாச்சாரம் என வினவினார். பெரியநாயகம் விஷயத்தைக் கூறியதும் 'இதுக்கா கவலைப்படறே. ரேஷன் கடைகள் எதுக்கு இருக்கு அங்க தள்ளி விடு. போ, வேலையைப் பாரு என்றான் ராமலிங்கம்.

இவர்கள் பேச்சைக் கேட்டதும் சர்க்கரையும், உப்பும் இப்படி மறியாதை இல்லாமல் பேசுகிறார்களே? அப்படியா நாம் மக்களுக்கு பயணற்று போவோம்!. என்று வருந்தி தங்களை உற்பத்தி செய்யும் கரும்பினிடமும், கடலிடத்திலும் முறையிட்டன.

கரும்பு சொன்னது சர்க்கரையைப் பார்த்து நீ என்ன உப்பா கரிச்சுக் கொட்ட? கல்யாணம் மற்றும் எல்ல வைபவங்களுக்கும் நீ இல்லா மலா, குழந்தைகள் பிறந்தாலும் உன்னைத்தான் கொடுப்பார்கள். தெய்வப் பிரசாதமாகிய சர்க்கரைப் பொங்கலிலும் உன் அண்ணன் வெல்லம் தான். ஒரு நல்ல செய்தி சொன்னால் அவன் வாயில் சர்க்கரைப் போடுங்கள் என்பது சொல் வழக்கம். யானைக்கு பிடித்ததும் கரும்புதான், அம்பாள் கையில் வைத்திருப்பதும் கரும்புதான். கரும்பில்லாத பொங்கல் விழாவா- என்று தைரியம் கூறியது.



இதைக் கேட்ட கடல் ஆத்திரத்தில் பொங்கியது. டேய் உப்பு! என்ன யோசிக்கிரே. நீ இல்லாம ஒரு பண்டமுண்டா. உப்பில்லா பண்டம் குப்பையிலே என்று சொல்வார்கள். சாம்பாராகட்டும், ரசமாகட்டும், மசாலா, பொறியல் எதுவானாலும் நீ இல்லாவிட்டால் வாயில் வைப்பார்களா? ஊறுகாய்க்கும் உப்பு, உடல் அடக்கத்திற்கும் நீ தான், "உங்கள் உப்பைத் தின்னவன் உங்களுக்கு துரோகம் நினைப்பானா என்று தானே சொல்கிறார்கள்".

உப்பு சப்பில்லாத என்ன சாப்பாடு என்று சொல்லும் நம்ம ஆதரவாளராகிய சாப்பாட்டு ராமன்கள் இல்லையா? நீ பல பிராண்டுகளில் விற்பனைக்கு வந்து விட்டாய். நோய் குணமாக கடவுளிடம் வேண்டிக் கொண்டு உப்பு போடுகிறார்களே. தெரியாதா உனக்கென்ன குறைச்சல் என்றது கடல்.

ஒரு தினம் பெரிய நாயகம் தள்ளாடி வீட்டில் நுழைவதைப் பார்த்த அவன் மனைவி, 'ஏங்க! என்ன ஒரு மாதிரி இருக்கீங்க? என்று கேட்டது..

என் காலில் ஒரு புண் வந்தது. அதுக்கு மருந்து போட்டும் இன்செக்ஷன் செய்தும் குணமாகலே. டாக்டர் சொல்றார். எனக்கு சக்கரை வியாதியாம். இனிப்பு சாப்பிடக் கூடாதாம்.

அப்போது தான் புண் குணமாகுமாம் என்று என்று புலம்பினான் பெரிய நாயகம்.

அதனாலென்ன. இனிமேல் நீங்க சாப்பிடறதிலே சர்க்கரையை ஒதுக்கிடறேன் என்று சமாதானப்படுத்தினாள் அவன் மனைவி.

இதைக் கேட்ட உப்பிற்கு ரொம்ப குஷி. சர்கரையைப் பார்த்து இளித்தது.

அப்போது ராமலிங்கம் அங்கு வந்தார். அவரிடம் எல்லாவற்றையும் விலாவரியாக கூறினார் பெரிய நாயகம்.

அதைக் கேட்ட ராமலிங்கம் கண்ணீர் விட்டார். உன்கதை இப்படி. என் கதை தெரியுமா. நான் திடீரென்று மயங்கி விழுந்து விட்டேன். டாக்டரிடம் எடுத்து சென்றார்கள்.

அவர் சோதித்துவிட்டு எனக்கு ரத்தக் கொதிப்பாம், கொழுப்பு சத்து அதிகரித்து விட்டதாம். உடன் சாப்பாட்டில் உப்பைக் குறைக்க வேண்டுமாம். அல்லது அறவே தவிர்க்க வேண்டுமாம் என வருந்தினார்.

இதை செவியுற்ற சர்க்கரை உப்பை ஏளனமாகப் பார்த்தது.

இனிப்பு உப்பைக் கூப்பிட்டு 'நம்மைப் பற்றி நமக்கே தலைகனமேறி விட்டது. அதனால் தான் நம்மைப் படைத்த கடவுள் நம் தலையில் குட்டிப்பாடம் கற்பித்தார் என்றது.

எதுவுமே அளவுக்கு மீறினால் நஞ்சுதான். என்பதையும் மருந்து போல் சாப்பிட்டால் விருந்து சாப்பிடலாம். விருந்து போல் சாப்பிட்டால் மருந்து தான் கதி!

## 10.2016 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1216 - இங்கிலாந்தின் ஜோன் மன்னன் இறக்க, அவனது ஒன்பது வயது மகன் மூன்றாம் ஹென்றி ஆட்சிக்கு வந்தான்.
- 1453 - பிரெஞ்சு போர்டோ நகரைக் கைப்பற்றியதுடன் நூறாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.
- 1469 - அரகன் நாட்டு இளவரசன் இரண்டாம் பேர்டினண்டுக்கும் காஸ்டில் நாட்டின் இளவரசி இசபெலலாவுக்கும் திருமணம் நடைபெற்றது. இந்நிகழ்வு பின்னர் 1516 இல் ஸ்பெயின் நாடு ஒருங்கிணைக்கப்பட வழிகோலியது.
- 1655 - சுவீடனின் காரெல் பத்தாம் குஸ்டாவ் மன்னன் போலந்தின் கிராக்கோவ் நகரைப் பிடித்தான்.
- 1806 - எயிட்டியின் மன்னன் முதலாம் ஜாக் படுகொலை செய்யப்பட்டான்.
- 1812 - பிரான்சின் நெப்போலியன் பொனபார்ட் மாஸ்கோவில் இருந்து பின்வாங்கினான்.
- 1813 - ஜேர்மனியின் லைப்சிக் நகரில் நெப்போலியன் பொனபார்ட் பெரும் தோல்வியடைந்தான். ரைன் கூட்டமைப்பு முடிவுக்கு வந்தது.
- 1912 - லிபியாவின் திரிப்பொலி நகரை இத்தாலியப் படைகள் ஒட்டோமான் பேரரசிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1935 - எதியோப்பியாவை இத்தாலி கைப்பற்றியதை அடுத்து நாடுகளின் கூட்டணி இத்தாலி மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.
- 1943- காச நோய்க்கான Streptomycin vd;wjPEz;k vjpup மருந்து ரட்கஸ் பல்கலைக் கழகத்தில் பிரித்தெடுக்கப்பட்டது.
- 1950 - சீன இராணுவம் திபெத்தின் காம்டோ நகரைக் கைப்பற்றினர்.
- 1954 - சோ ஓயு மலையின் உச்சி முதன் முறையாக எட்டப்பட்டது.
- 1960 - ஐக்கிய அமெரிக்க நாடுகள் கம்யூனிசக் கியூபா மீது பொருளாதார தடைகளை விதித்தது.
- 1974 - நியுயே நியூசிலாந்திடமிருந்து விடுதலைப் பெற்று சுயாட்சி மண்டலமாகியது.
- 1976 - சிம்பன்சி உலகின் அருகி வரும் மிருக இனமாக அறிவிக்கப்பட்டது.
- 1983 - கிரெனாடாவில் இடம்பெற்ற இராணுவப புரட்சியை அடுத்து அதன் பிரதமர் மோரிஸ் பிஷொப் படுகொலை செய்யப்பட்டார்.
- 1986 - மொசாம்பிக் அதிபர் சமோரா மேச்சல் உட்பட 33 பேர் விமான விபத்தொன்றில் கொல்லப்பட்டனர்.
- 1991 - வட இத்தாலியில் ஏற்பட்ட 7.0 ரிக்டர் அளவான நிலநடுக்கம் காரணமாக 2000 பேர்வரை இறந்தனர்.
- 2000 - பிபிசியின் யாழ்ப்பாண நிருபர் நிமலராஜன் துணை இராணுவக் குழுவினரால படுகொலை செய்யப்பட்டார்.
- 2001 - 400 அகதிகளை ஏற்றிச் சென்ற இந்தோனாசியப் படகு கிறிஸ்துமஸ் தீவில் கவிழ்ந்ததில் 353 பேர் கொல்லப்பட்டனர்.
- 2003 - திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அன்னை தெரேசாவை முத்திப் பேறு பெற்றவராக அறிவித்தார்.
- 2005 - மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்காக சதாம் உசேனுக்கு எதிரான வழக்குத் தொடங்கியது.
- 2009 - தமிழ்நாதம், புதினம் ஆகிய ஈழச்சார்பு இணையத்தளங்கள் நிறுத்தப்பட்டன.

**பிறப்புக்கள்**

- 1888 - நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை. (இ. 1972)
- 1910 - சுப்பிரமணியன் சந்திரசேகர், நோபல்விருது பெற்ற இந்திய இயற்பியலாளர். (இ. 1995)
- 1976 - கோ சன், தென் கொரிய விண்வெளி வீரர்.
- 1946 - ரா.தாமரைக்கனி, தமிழக அரசியல்வாதி . (இ. 2005)

**இறப்புகள்**

- 1937 - எர்னெஸ்ட் ரதர்ஃபோர்டு, நியூசிலாந்து இயற்பியல் அறிஞர் .(பி. 1871)
- 2000 - நிமலராஜன், பிபிசியின் யாழ்ப்பாண நிருபர்.
- 2006 - ஸ்ரீவித்யா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை . (பி 1953)

**சிறப்பு நாள்**

- அல்பேனியா: அன்னை தெரேசா நாள்.
- நியுயே: அரசியலமைப்பு நாள். (1974இல் நியூசிலாந்திடமிருந்து விடுதலை)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 60 | 50 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 50 | 80 | 80 | 120 | 80 |
| தக்காளி | 60 | 100 | 65 | 60 | 70 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 | 70 | 80 | 60 |
| கோவா | 60 | 100 | 70 | 80 | 80 | 100 | 80 |
| கரட் | 80 | 120 | 100 | 80-160 | 80 | 160 | 70 |
| பூசனி | 30 | 30 | 20 | 40 | 30 | 40 | 30 |
| புடோல் | 50 | 60 | 35 | 60 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 45 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 70 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 110 | 160 | 120 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 70 | 120 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 110 | 80 | 90 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 60 | 50 | 90 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 100 | 140 | 120 | 150 | 140 |
| பீற்றூட் | 40 | 60 | 45 | 50 | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 200 | 110 | 120 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 70 | 80 | 60 | 80 | 100 |
| போஞ்சி | 180 | 200 | 150 | 200 | 160 | 200 | 200 |
| கத்தரிதும்புளா | 40 | 30 | 30 | 50 | 50 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 25 | 30 | 20 | 40 | 15 |
| தேசிக்காய் | 550 | 500 | 500 | 500 | 500 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 20-35 | 50 | 30 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 180 |
| வெங்காயப்பூ | 140 | — | — | 160 | 170 | — | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 30 | 60 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 50 | — | — | — | — | — |

## ஆழ்கடல் ரோந்துக் கப்பலுடன்

# 2623 கோடி ரூபாய் இராணுவ உதவி

# இலங்கைக்கு சீனா வழங்க இணக்கம்

(கொழும்பு)

**இலங்கைக்கு சுமார் 2623 கோடி ரூபா (120 மில்லியன் யுவான்) பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்கவும் ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்றை வழங்கவும் சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.**





பீஜிங்கில் கடந்த 13ஆம் திகதி நடந்த இரண்டாவது இலங்கை- சீன பாதுகாப்புக் கலந்துரையாடலின் போதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

சீனாவின் மத்திய இராணுவ ஆணையத்தின் கூட்டு அதிகாரிகள் திணைக்களத்தின் பிரதித் தலைவர் அட்மிரல் சன் ஜியாங்கூ தலைமையிலான சீனப் பாதுகாப்பு அதிகாரிகள்குழுவும்இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தலைமையிலான இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் குழுவும் இந்த பாதுகாப்புக் கலந்துரையாடலில்பங்கேற்றிருந்தன.

இந்தக் கலந்துரையாடலில், உயர்மட்ட பரிமாற்றங்கள், இராணுவ உதவிகள், பயிற்சி வாய்ப்புகள், பாதுகாப்புத்துறைசார் சிந்தனைக் குழாம்களின் ஒன்றுகூடல், புலனாய்வு ஒத்துழைப்பு, கூட்டு இராணுவப் பயிற்சிகள், பாதுகாப்புக் கருத்தரங்குகளில் பங்கேற்றல், பயிற்சிப் பட்டறைகள் உள்ளிட்ட அனைத்து விதமான பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பாகவும் இருதரப்பும் மீளாய்வு செய்தன.


சீனா- இலங்கை இடையிலான ஒட்டுமொத்த இருதரப்பு உறவுகளில் பாதுகாப்பு ஒதத்துழைப்பு முக்கிய தூணாக இருப்பதாகவும், அதனைத் தொடர்ந்து வலுப்படுத்துவதற்கும் இருதரப்பும் இணக்கம் கண்டுள்ளன.

இந்தப் பாதுகாப்புக் கலந்துரையாடலின் முடிவில், இலங்கைக்கு சுமார் 2623 கோடி ரூபா (120 மில்லியன் யுவான்) பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்குவதற்கும் ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்றை வழங்குவதற்குமான இரண்டு புரிந்துணர்வு உடன்பாடுகளும் கையெழுத்திடப்பட்டன.

இந்தத் தகவலை இலங்கை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது. எனினும், சீன இராணுவத் தலைமையகம் வெளியிட்டிருந்த தகவலில், இந்தப் பாதுகாப்புக் கலந்துரையாடலில் இலங்கைக்கு 2623 கோடி ரூபா இராணுவ உதவிகளை அளிப்பது மற்றும் ஆழ்கடல் ரோந்துக் கப்பலை வழங்குவது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டது பற்றிய எந்தக் குறிப்பும் இடம்பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 873

### விஜா



இந்த படத்தை பார்த்த பின்
தலைகீழாக திருப்பி மறுபடியும் இந்த படத்தை
பாருங்கள்அப்போது தெரியும் போட்டோ
கிராபியின் மாயாஜாலம்

### றெஜி




### காயத்திரீ

மனைவி:-
என்னாங்க ஒரு வேலை நான் தண்ணி
லொறியிலஅடிபட்டு செத்து போயிட்டா நீங்க
என்ன செய்வீங்க?
கணவன்:
-நான் உடனே அந்த லொறி டிரைவரை பிடிச்சு
மரணஅடி அடிப்பேன்.தூக்கி போட்டு மிதிப்பேன்.
மனைவி:-ஏங்க?உங்களுக்கு என் மேல
அம்புட்டுபாசமா?
கணவன்:-
அதுலாம் ஒன்றுமில்ல இரண்டு வருடத்துக்கு
முன்னாடி இந்த தண்ணி லாரிய ஏன்டா
கொண்டு வரவில்லை என்று
சொல்லி மிதிப்பேன்.

### நதிபா



### சங்கர்

வாழ்க்கையின் மிக
பெரிய சந்தர்ப்பம்
ஏது?

"மனைவியின்
கன்னத்தில் கொசு
உட்காருவது."

### றொகான்

பால் தரும் பசுவை கோமாதாவா
ஏத்துகிட்டு கொல்லாம விடுற மாதிரி...



கொஞ்சமா பால் தரும் என்னை ஏன்?
உங்க சின்னமாவ ஏத்துகிட்டு வெட்டமா
விடக் கூடாது.. ☺☺☺

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கைதிகளின் மனநிலையில் மாற்றம்; 18 ஆயிரம் கைதிகள் தடுத்துவைப்பு

சிறைக்கைதிகளின் தற்கொலை செய்துகொள்ளும் மனநிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கைதிகளின் மனநிலைமையை மேம்படுத்துவதற்காக நடைமுறை ரீதியான பங்களிப்பை வழங்குமாறு மனோதத்துவ ஆலோசகர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் ஆறு கைதிகளும் இந்த வருடத்தில் நான்கு கைதிகளும் சிறைச்சாலைகளுக்குள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தவிர சிறைச்சாலைகளுக்குள் பல்வேறு காரணங்களால் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 66 பேர் உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர்துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் சிறைச்சாலைகளுக்குள் 93 கைதிகள் உயிரிழந்துள்ளமை பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில சுமார் 18ஆயிரம் கைதிகள தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைத்தமிழ் இளைஞன் பிரான்ஸில் படுகொலை!

பிரான்ஸில், இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரான்ஸில் உள்ள ஒபேவில்லியேவில் (Aubervilliers – Seine-Saint-Denis) எனும் இடத்தில் இந்த சம்பவம் கடந்த 16ஆம் திகதி அதிகாலை இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் 30 வயது மதிக்கத்தக்க இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கொலைச்சம்பவம்தொடர்பில் நான்கு இலங்கை இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு பொலிஸார் கூறியுள்ளனர். குறித்த கொலை தொடர்பான முழுமையான விபரங்கள் இதுவரையிலும் தெரியவில்லை.

ஆனால் ஒரு மோதலின் முடிவிலேயே, இந்தப் படுகொலை நடந்துள்ளதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மோதல்கள் இடம்பெற்றமைக்கான அடையாளங்கள் கொலை இடம்பெற்ற வீட்டில் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ள பொலிஸார், பொபினி நீதிமன்றத்தின் பணிப்பில், கொலைக்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7-10)

# இரட்டைக் குடியுரிமையை கைவிட்டால் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு!

## புலம்பெயர்ந்தோருக்கு அழைப்பு



இரட்டைக் குடியுரிமையை கைவிட்டால் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாக புலம்பெயர் சமூகத்திற்கு உள்விவகார அமைச்சர் எஸ்.பி. நாவின்ன அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்ட போதிலும் தற்போது அந்தப் பிரச்சினைகளுக்கு புதிய அரசாங்கம் முற்றுப்புள்ளி வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று வாழ்ந்துவரும் இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமையை வழங்கும் வேலைத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. கொழும்பிலுள்ள உள்விவகார அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றதோடு இதில் 800 பேருக்கு இரட்டைப்பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

"வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளவர்களுக்கு இந்நாட்டு பிரஜாவுரிமை அல்லது இரட்டைப் பிரஜாவுரிமையை வழங்கும் பணியை ஆரம்பித்துள்ளோம். விசேடமாக இந்த நாட்டில் பிறந்தவர்கள் பலர் வெளிநாட்டிற்குச் சென்று 30, 40 வருடங்களாக உள்ளனர். அவர்களுடைய பிள்ளைகளுக்கு இந்த நாட்டை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல சில சந்தர்ப்பங்களில் இங்கு வந்து சில மாதங்களிற்கு தங்கியிருந்து மீண்டும் நாடு திரும்புவதே வழக்கமாக இருந்தது. இப்படிப்பட்ட பல பிரச்சினைகள் இருந்ததினால் பிறந்த நாட்டிலேயே உரிமைகளை வழங்கும் முக்கியத்துவத்தை இந்த அரசாங்கம் நன்கு புரிந்து கொண்டுள்ளது. அனைவருக்கும் அதிகளவிலான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

முன்னர் இங்கு வந்தால் ஒரு மாதத்திற்குள் சென்றுவிட வேண்டும், சொந்தபந்தங்களைப் பார்க்க முடியாது, நண்பர்களை சந்திக்க முடியாது போன்ற பலவித பிரச்சினைகள் இருந்தன. இன்று அந்த அனைத்து உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்ட பின்னர் காலவரையறை இன்றி என்றும் இங்கு இருக்க முடியும். சொத்துக்களை வைத்துக் கொள்ளும் உரிமையும் உள்ளது. 19ஆவது திருத்தத்தினால் ஒரேயொரு பிரச்சினையை சந்திக்க நேரிடுகின்றது.

இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர் இங்கு வந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது. எனினும வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன்னர் இரட்டைப் பிரஜாவுரிமையை இரத்து செய்தால் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். எனவே தேர்தலில் போட்டியிட வேண்டுமென்றால் அந்தந்த நாடுகளிலுள்ள தமது பிரஜாவுரிமையை இரத்து செய்துவிட்டு வந்தால் அதற்கான சந்தர்ப்பமும் அளிக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# கடைக்காக மரத்தின் மீது ஏறி வயோதிபப்பெண் ஆர்ப்பாட்டம்



அம்பாந்தோட்டை - தங்காலை பிரதான வீதியில் இருக்கும் தனது கடையை தொடர்ந்து நடத்திச் செல்வதற்கு அனுமதி தருமாறு வயோதிபப் பெண் ஒருவர் மரத்தின் மீது ஏறி நேற்று முன்தினம் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தாயான குறித்த வயோதிபப் பெண்ணே இவ்வாறு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த பெட்டிக்கடை 2011 இல் இருந்து அந்தப் பகுதியில் இருப்பதாகவும், தற்போது கடையை மாற்றுவதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே தான் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் வயோதிபப் பெண் கூறியுள்ளார். (இ-7-10)

# நேபாளத்தில் 3 கைகளுடன் அதிசய சிறுவன்



நேபாளத்தைச் சேர்ந்த 2 வயது சிறுவன் கவுரப் கரும். இவன் 3 கைகளுடன் பிறந்தான். 3ஆவது கை அவனது நடு முதுகில் இருந்து முளைத்து வளர்ந்து வருகிறது. இதனால் அவன் தனது அன்றாட வாழ்க்கையில் மிகவும் அவதிப்படுகிறான். தூங்கும் போது மிகவும் சிரமப்படுகிறான். அவனது 3ஆவது கை முதுகுத் தண்டு வடத்தில் இருந்து உருவாகியுள்ளதாக வைத்தியர்கள் கூறுகின்றனர்.

பொதுவாக தாயின் கருவில் இரட்டைக் குழந்தைகளாக உருவாகி அது முழு வளர்ச்சி அடையாமல் இருப்பதால் இது போன்று கைகள் உருவாகின்றன என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இது போன்ற விபரீதங்கள் 1500இல் ஒரு குழந்தைக்கு அரிதாக உருவாக வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

தேவையின்றி கூடுதலாக உருவாகியுள்ள அந்த கையை அறுவை சிகிச்சை மூலம் அகற்றுவது மிகவும் ஆபத்தானது. அதை அகற்றுவதன் மூலம் சிறுவனின் தண்டு வடத்தில் பாதிப்பு ஏற்பட்டு உடலில் பக்கவாதம் நோய் உருவாக பெருமளவில் வாய்ப்பு உள்ளது. எனவே அதை அகற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

நேபாளத்தில் ஒரு பகுதி மக்கள் மத நம்பிக்கையில் மிகவும் ஈடுபாட்டுடன் திகழ்கின்றனர். கர்ப்பகாலத்தில் மருத்துவ சிகிச்சை, ஸ்கான் பரிசோதனை செய்து கொள்ள அவர்களது மத குருமார்கள் அனுமதிப்பதில்லை. அது போன்ற காரணங்களால் இத்தகைய நிகழ்வுகள் ஏற்படுவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 47 மருந்துப் பொருட்களின் விலை சூத்திர வர்த்தமானி 21இல் வெளியீடு

நாட்டின் இலவச சுகாதார சேவையை மேலும் மேம்படுத்தும் நோக்கில் அதிகளவில் பயன்படுத்தப்படும் 47 மருந்துப் பொருட்களுக்கான விலைச் சூத்திர அதி விசேட வர்த்தமானி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்படுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்த 47 மருந்துப் பொருட்களுக்கான உச்ச சில்லறை விலை அடங்கிய வர்த்தமானி வரைவு நேற்று முன்தினம் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அவர்கள் அதனை எமக்கு கையளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர். அவ்வர்த்தமானி கிடைக்கப்பெற்றதும் மறுநாளே அதிவிசேட வர்த்தமானியாக வெளியிடப்படும் எனவும் அவர் கூறினார்.

இவ்விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் குறித்த மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றதா? என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு சுகாதார திணைக்களத்திற்கும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அவர், விலைச்சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துப் பொருளின் விலை சந்தையில் குறைவாகக் காணப்படுமாயின அதேவிலைக்கே தொடர்ந்தும் அம்மருந்துப் பொருள் விற்பனை செய்யப்பட வேண்டும் என்பது வர்த்தமானி ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது எனவும அவர் தெரிவித்தார.



மருந்துப் பொருட்களுக்கான விலைச்சூத்திரம் குறித்த செய்தியாளர் மாநாடு அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இச்செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல்-2017

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2017ம் திகதி முதல் 31.12.2017ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்படிவக்கட்டணம்-ரூபா 500.00 (வரி நீங்கலாக)
கேள்விப்படிவம் விநியோகித்தல்-18.10.2016- 03.11.2016 வரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்-04.11.2016 மு.ப 9.30 மணி வரை
கேள்வி திறத்தல்-04.11.2016 மு.ப. 10.00 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 04.11.2016 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக் கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவ ரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுக மளிக்கலாம்.

குறிப்பு :

1.கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித்தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். 1/3 பகுதியை செலுத்தியவர்கள் மிகுதித் தொகையின் 1/8 பங்கை ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான 8 மாத காலப்பகுதிக்குள் 2017 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும். தவறும் பட்சத்தில் மாத குத்தகைப் பணத்தின் 10% தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும்.

2.சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 4 சதவீத கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூபா 50.00 பெறலாம். மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5'X5') நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடப்படலாகாது.

3.சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கரவண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00உம் அறவிடலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடப்படலாகாது.

4.சபையின் கடைகளில் இறைச்சி / கருவாடு / கோழி ஆகியன விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகையை செலுத்துதல் வேண்டும்.

5.கேள்வியில் சித்தி பெறுபவர் குத்தகைக்கு எடுக்கத் தவறின் இரண்டாவது கேள்விதாரருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

6.சிற்றுண்டிச்சாலைகளை குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.

6.1.சிற்றுண்டிச்சாலை காலை 7.00 மணி தொடக்கம் மாலை 7.00மணிவரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.

6.2.சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.

6.3.மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூ.15000.00 ஐயும் உடனடியாகவே செலுத்துதல் வேண்டும்.

7.கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு அக்காலப்பகுதிக்குரிய VAT, NBT சேர்த்துச் செலுத்துதல் வேண்டும்.

8.கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் புகைப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் தாங்கள் பகுதி கிராம சேவையாளர் மூலம் தாங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

9.சபையின் கடை இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதி யில் உள்ள கடைக்கு (முஸ்லிம்கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக்கடை) கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிபவர்கள் குறிப்பிட்ட இடத்தின் காணி உரிமையாளரின் சம்மதக் கடிதத்தையும் இணைத்தல் வேண்டும்.

10.துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோருபவர் யாழ். நகரப்பகுதியில் அல்லது ஆகக்கூடியதாக நகரத்தின் மையத்திலிருந்து 10km சுற்றுவட்டத்தில் நிரந்தர உணவகம் வைத்திருத்தல் வேண்டும்.

11.யாழ்ப்பாண பொது நூலக சிற்றுண்டிச்சாலை, துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றிற்கான குத்தகை காலம் 01.01.2017 - 30.06.2017 ஆகும்.

12.சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணம் மாநகர சபைக்கே உரியது.

13.கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

## இறைச்சிக்கடை குத்தகை- 2017

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 183,000.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 58,500.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 208,800.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 237,120.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 155,500.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 75,200.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 876,340.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 82,100.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 877,050.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 888,340.00 |
| 11 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 144,000.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 802,800.00 |
| 13 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 487,800.00 |
| 14 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 92,430.00 |
| 15 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 315,000.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 793,050.00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 305,100.00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 251,850.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 360,000.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 320,000.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 225,100.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 225,000.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 200,150.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 222,300.00 |
| 25 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 347,000.00 |
| 26 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 59,760.00 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,150.00 |
| 28 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 566,490.00 |
| 29 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 72,100.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 534,260.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 561,210.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 405,750.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 430,760.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 475,500.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 530,610.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 408,600.00 |
| 37 | முஸ்லிம் கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 265,560.00 |

## பொதுச்சந்தை குத்தகை 2017

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 2,330,000.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 3,504,600.00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 2,212,550.00 |
| 4 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 1,803,000.00 |
| 5 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 577,000.00 |
| 6 | அரியாலை மீன்சந்தை | 1,000.00 | 67,330.00 |
| 7 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 323,000.00 |
| 8 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 65,700.00 |
| 9 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 188,550.00 |
| 10 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் சந்தை | 2,000.00 | 8,550.00 |
| 11 | இந்து விடுதிக்கு தெற்குப் பக்கமாக உள்ள வாகன தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 49,975.00 |
| 12 | யாழ் கச்சேரி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 332,340.00 |
| 13 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை (01.01.2017 - 30.06.2017) | 5,000.00 | 120,000.00 |
| 14 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (01.01.2017 - 30.06.2017) | 5,000.00 | 135,000.00 |

**மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.**

**மாநகர சபை அலுவலகம்**
**யாழ்ப்பாணம். 18.10.2016**

(F-6153)

**பொ.வாகீசன், ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம் மாநகர சபை.**



# அரசாங்கத்துக்குள் பிளவுகள் இல்லை

## சு.க.அமைச்சர்கள் சமாளிப்பு



(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு தொடர்பான ஜனாதிபதியின் அண்மைய கருத்துக்களால் அரசாங்கத்துக்குள் எந்தவித பிளவும் ஏற்படவில்லை.

இதனால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் எந்தவிதமான உண்மையும் இல்லையென அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஜனாதிபதி எவ்விதமான கருத்துக்களையும் கூறவில்லை.

மாறாக பக்கசார்பற்ற வகையில் சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுக்குமாறே அவர் கூறியிருப்பதாக சு.க. அமைச்சர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர்களான அனுரபிரிய தர்ஷன யாப்பா, எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா ஆகியோர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் அண்மைய கருத்தைத் தொடர்ந்து பலர் பல்வேறு கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

அரசாங்கம் கவிழப் போகிறது, பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடு, சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளில் ஜனாதிபதி தலையிடுகிறார், சிங்கள வருடப்பிறப்பிற்கு முன்னர் புதிய அரசாங்கத்தை அமைப்போம் என வேறுபட்ட கருத்துக்கள் கூறப்படுகின்றன.

இவற்றில் எந்தவிதமான உண்மையும் இல்லையென அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.



அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டமை, முன்னாள் கடற்படை அதிகாரிகள் நீதிமன்றத்தின் கூட்டில் நிறுத்தப்பட்டமை, திவிநெகும பணிப்பாளர் ரணவக்க சுற்றுலாத்துறையின் பணத்தை மோசடியாகப் பயன்படுத்தியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டமை உள்ளிட்ட சம்பவங்களைத் தொடர்ந்தே ஜனாதிபதி கருத்தைக் கூறியிருந்தார்.

விசாரணைகள் நியாயமாக முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது. இதன் அடிப்படையிலேயே அவர் அவ்வாறான கருத்துக்களைக் கூறியிருந்தார்.

இதனால் அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது என அர்த்தப்படுத்த முடியாது என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, சுயாதீன ஆணைக்குழுக்களில் சில குறைபாடுகள் காணப்பட்டாலும் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இதனை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது என அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா சுட்டிக்காட்டினார்.

கடந்த காலத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறை பயன்படுத்தப்பட்டமைக்கும் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்றமைக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் உள்ளன.

கடந்த காலத்தில் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியால் ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளில் தலையீடுகள் ஏற்பட்டன.

இருந்த போதும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களை குறைப்பது மட்டுமன்றி, அதிகாரங்களை சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் வழங்கி ஜனநாயக மயப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

ஜனாதிபதியின் கருத்துத் தொடர்பில் பலர் மாறுபட்ட நிலைப்பாடுகளை வெளிப்படுத்தினாலும் அரசாங்கத்துக்குள் முரண்பாடு எதுவும் இல்லையென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# தமிழ் சினிமா வரலாறு

## தில்லானா மோகனாம்பாள் 278

1968 ஆம் ஆண்டில் ஏ.பி. நாகராஜன் தயாரித்து இயக்கிய தில்லானா மோகனாம்பாள் ஒரு திரைக்காவியம்.

நாதஸ்வரவித்துவான் சிக்கல் சண்முகசுந்தரமாக சிவாஜிகணேசனும் நடன நங்கை மோகனாம்பாளாக பத்மினியும் வாழ்ந்து காட்டினர்.

தில்லானா மோகனாம்பாள் சுப்பர்ஹிட் படமாக அமைந்தது. இப்படம் ஆங்கில விளக்க உரையுடன் மேல் நாட்டில் திரையிடப்பட்டது. அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்று இந்தப் படத்தின் பிரதியை வாங்கிச் சென்று நாதஸ்வரம், பரதம் ஆகிய கலைகளைப் பற்றி தங்களது மாணவர்களுக்கு விளக்கப்படுத்தி வருகிறது.

### தில்லானா மோகனாம்பாள் பின்னணி

தில்லானா மோகனாம்பாள் திரைப்படமாகியதில் ஒரு சுவையான கதையே இருக்கிறது.

கொத்தமங்கலம் சுப்பு எழுதிய தில்லானா மோகானாம்பாள் ஆனந்த விகடனில் தொடர் கதையாக வெளிவந்து கொண்டிருந்தபோதே அதை ஆவலுடன் ஏ.பி.நாகராஜன் படித்து வந்தார். அதை படமாக்க விரும்பினார்.

கதை உரிமை ஆனந்த விகடன் ஆசிரியரும் ஜெமினி அதிபருமான எஸ்.எஸ். வாசனிடம் இருந்தது. அவரை ஏ.பி.நாகராஜன் சந்தித்தார்.

தில்லானா மோகனாம்பாளை படமாக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

இக்கதையை நாம் கூட்டாக சேர்ந்து எடுப்போம். உங்களுக்கு முழு சுதந்திரம் உண்டு. படம் எடுக்கும் போது நான் தலையிடமாட்டேன் என்றார் வாசன்.

ஆனால் ஏ.பி.நாகராஜன் இதற்கு சம்மதிக்கவில்லை. இலாபமோ, நட்டமோ எதுவானாலும் அது என்னையே சேரட்டும். இது தான் நான் கடைப்பிடித்து வரும் கொள்கை என்றார் நாகராஜன்.

வாசன் சிரித்துக்கொண்டே நாகராஜன்! தில்லானாவை நீங்களே படமாக எடுங்கள். ஆனந்தவிகடனில் வந்த இந்தக் கதையை நீங்கள் அதன் தரம் குறையாமல் எடுப்பீர்கள் என்ற நம்பிக்கை உங்களுடைய திருவிளையாடல் படத்தைப் பார்த்த பிறகு எனக்கு ஏற்பட்டிருக்கிறது என்றார்.

கதைக்கு கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு என்று கேட்டார் நாகராஜன். 25 ஆயிரம் ரூபா கொடுங்கள் போதும் என்றார் வாசன். உடனே செக் எழுதிக் கொடுத்து விட்டார் ஏ.பி.என்.

கதை உரிமைக்காக வாசன் ரூ.50 ஆயிரமாவது கேட்பார் என்று நாகராஜன் நினைத்துக் கொண்டிருந்தார். வெறும் 25 ஆயிரத்தை சொன்னதும் அவருக்கு ஒரே ஆச்சரியம். கதைக்கு ரூ.50 ஆயிரமாவது தர வேண்டும் என்பது அவர் விருப்பம். எனவே மீதி ரூ.25 ஆயிரத்தை கதாசிரியர் கொத்தமங்கலம் சுப்புவிடம் கொடுத்து விட தீர்மானித்தார்.



மனைவி ராணி அம்மாள், மூத்த மகன் வெங்கடசாமி, இளைய மகன் பரமசிவம், மகள் விஜயலட்சுமி ஆகியோருடன் ஏ.பி.நாகராஜன் (1965).

இந்தச் சம்பவம் நடந்த போது கதாசிரியர் கொத்தமங்கலம் சுப்பு கண் சிகிச்சைக்காக எழும்பூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஏ.பி.நாகராஜன் வைத்தியசாலைக்குச் சென்று அவரை சந்தித்தார்.

வாசனிடம் கதை உரிமையைப் பெற்ற செய்தியை சொல்லிவிட்டு கதை எழுதிய உங்களுக்கு என் சொந்த முறையில் 25 ஆயிரம் ரூபாய் கொடுக்க விரும்புகிறேன் என்றார்.

சற்று நேரத்துக்கு முன் வாசன் இங்கு வந்திருந்தார். நீங்கள் அவரிடம் கொடுத்த ரூ.25 ஆயிரத்தை என்னிடம் கொடுத்துவிட்டுச் சென்றார் என்றார். கொத்தமங்கலம் சுப்பு! இதைக்கேட்டு திகைத்துப் போன நாகராஜன் தான் கொண்டு போயிருந்த ரூ.25 ஆயிரத்தையும் சுப்புவிடம் கொடுத்தார்.

### சின்ன பட்ஜெட் படங்கள்

பெரிய படங்களையே தயாரித்து வந்த ஏ.பி.நாகராஜன் குறைந்தபட்ஜெட்டில் வா ராஜா வா, திருமலை தென்குமரி போன்ற படங்களையும் தயாரித்து வெற்றி கண்டார். வா ராஜா வா 100 நாள் படமாகும்.

வா,ராஜா, வா படத்தின் மூலம் தான் இசை அமைப்பாளராக குன்னக்குடி வைத்தியநாதன் அறிமுகமானார்.

சிவந்த மண், நம் நாடு முதலான பெரிய படங்கள் திரையிடப்பட்ட அதே நேரத்தில் வெளிவந்த வா ராஜா வா நூறு நாள் ஓடி வெற்றி பெற்றது. (தொடரும்)

உண்மையான மகிழ்ச்சி நேர்மையான – நாணயமான வாழ்க்கையில்தான் இருக்கிறது.
– நடிகர் ரஜினி காந்த்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதி மைத்திரி உரைத்த கருத்தால் நாட்டில் நடந்த நல்லதொரு முன்னுதாரணம்

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ் அவர்கள் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளமை ஒரு முக்கிய விடயமாகக் கருதப்படுகிறது.

இலஞ்ச ஊழல் விசாரணை நடைபெறும் முறைமையும் இதன்வழி முன்னைய ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் கைது செய்யப்படுவதும் தமக்குக் கவலை அளிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறியிருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மேற்போந்த கருத்து அரசியல் புலத்தில் மட்டுமன்றி நாடு பூராகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இலஞ்ச ஊழல் விசாரணை மேற்கொள்வது என்பது மிகவும் அவசியமானது. அவ்வாறான விசாரணையை மேற்கொள்ளும்போது தேவையான விடத்து சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து விசாரணை நடத்துவது தவிர்க்க முடியாதது.

இருந்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்து ஏதோ ஓர் ஆதங்கத்தின் வெளிப்பாடாக எழுந்தது என்பது ஊகிக்கப்படக்கூடியது.

இலஞ்ச ஊழல் விசாரணை என்ற பேரில் முன்னைய ஆட்சித் தரப்பினரைக் கைது செய்வது, தான் சார்ந்த சுதந்திரக்கட்சியை ஓரங்கட்டுவதற்கானது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருதி இருக்கலாம்.

இதற்கு ஆதாரங்கள் ஏதும் உண்டா என்று கேள்வி எழுப்புவதை விட, அண்மைக்காலமாக நல்லாட்சியில்; ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்து அதனை அஸ்தமிக்கச் செய்யத் திட்டம் தீட்டி உள்ளனர் எனவும் அதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவர்கள் நன்கு பயன்படுத்துகின்றனர் என்ற கருத்தும் பரவலாகப் பேசப்படுகிறது.

அதிலும் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தமது கட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதுடன் அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து ஐக்கிய தேசியக் கட்சியின் சூழ்ச்சிக்கு ஆளாகி விடாதீர்கள். அவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உடைக்கப் பார்க்கிறார்கள். அதன் ஓர் அங்கம் தான் முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர்கள் மற்றும் சகோதரர்களின் கைதுகள் என்று அடிக்கடி கூறி வருகின்றனர்.

கூடவே இத்தகையதொரு நிலைமையைத் தடுக்காவிட்டால் மகிந்த ராஜபக்ஷ புதிய அரசியல் கட்சியை ஆரம்பிப்பது தவிர்க்க முடியாதென்றும்

இவ்வாறு மகிந்த ராஜபக்ஷ புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்தால் அதுவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதிக்கும் என்றும் கருத்துரைக்க,

இதனைச் செவிமடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மனம்மாறி, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாட்டை விமர்சித்திருக்கலாம் என்று கருதுவதற்கு சந்தர்ப்பம் உண்டு.

எது எப்படியாயினும் ஒரு திரைப்படத்தில் நடிகர் விவேக் டாக்டராகப் பாத்திரம் ஏற்கிறார். அந்த ஊரின் நாட்டாமையின் கண்ணைப் பரிசோதனை செய்வதற்காக ஒரு வெள்ளைப் பலகையில் 'அ' என்று எழுதிக் காட்டுகிறார்.

'அ' வை எவ்வளவு பெரிதாக எழுதினாலும் நாட்டமையோ தெரியவில்லை என்றே கூறுகிறார். அவர் தெரியவில்லை என்று கூறியது பார்வையை அல்ல எழுத்தை.

தமிழில் முதல் எழுத்து 'அ' கூட உனக்குத் தெரியாதா என்று கோபமடைந்த விவேக் அந்த ஆளின் கன்னத்தில் அறைந்துவிட, நாட்டாமையை அறைந்த டாக்டரைத் தாக்குவதற்கு ஒரு கூட்டமே கூடிவிட்டது.

டாக்டரைத் தாக்க வேண்டாம் என்று தடுக்கும் நாட்டாமை கன்னத்தில் அறைந்ததிலும் ஒரு நன்மை இருக்கிறது. நீண்டகாலமாக ஆடிக்கொண்டிருந்த ஒரு பல்லு அந்த அறையில் விழுந்துவிட்டது. ஆகையால் டாக்டரின் இடத்தை மாற்றுங்கள் என்று உத்தரவிடுகிறார் நாட்டாமை.

இதுபோல ஜனாதிபதி மைத்திரியின் கருத்திலும் ஒரு நல்ல முன்னுதாரணம் நடந்துள்ளது. அதாவது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தபோது பதவி பெரிதல்ல என் கௌரவம்தான் பெரிது என்று லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் தனது பதவியைத் தூக்கி எறிந்தார் எனின், அது இந்த நாட்டில் நடந்த ஒரு நல் உதாரணம் எனலாமல்லவா?

பதவிக்கு ஆசைப்படாமல் தேவை ஏற்படும்போது அதைத் தூக்கி எறிவதற்கும் அஞ்சாதவர்களுக்கு இந்த நாடு நிச்சயம் தலைவணங்கும்.

ஆக, இந்த ராஜினாமாவை எங்கள் தமிழ் தலைமை ஒரு நல்ல பாடமாக் கற்றுக் கொண்டால் அதுவே பெரிய விடயமாகும்.

### சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு

## விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வானவில் இசைக்குழுக் கலைஞர்கள் மற்றும் ரொப் தமிழா தயாரிப்பு (Top Thamizha Production) திரைப்படக் கலைஞர்களும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டிய விளையாட்டுக்கள் மற்றும் கலை நிகழ்வுகள் 21,22 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விளையாட்டு நிகழ்வுகளும் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெறும். இந்நிகழ்வானது நெடுங்குளம் சந்தி, அரியாலையில் அமைந்துள்ள சர்வோதயம் பொது மண்டபத்தில் இடம்பெறவுள் ளது.


யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ [illegible]தலாம் வருட மாணவனும் வானவில் இசைக்குழுவின் இயக்குநருமாகிய தருமராஜா துவாரகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் நிதியுதவியாளர் நல்லையா சுதேஸ்குமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக இசைத்துறை விரிவுரையாளர் நல்லை கணேச சுந்தரம் கண்ணதாஸ், நல்லூர் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் இராமலிங்கம் சதாசிவம், நல்லூர் பிரதேச செயலக பிரதேச கலாசார உத்தியோகத்தர் ரஜனி குமாரசிங்கம், கௌரவ விருந்தினர்களாக சர்வசமயத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ–7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ். பிரதேசத்தில் உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, வெள்ள றோட், உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ நிலையம், உடுப்பிட்டி வாசிக சாலை, பொக்கணை சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலி[illegible]னை, சிதம்பரா வடக்[illegible] ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பெரியாகுளம் (பூந்தோட்டம்), வவுனியா நகரம், ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, நேரிய குளத்திலிருந்து செட்டிகுளம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

### பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

#### இறைவனை மட்டும் நம்புங்கள்



✦ பக்தனுடைய பிரேமைக்கு வசப்பட்டு பகவான் அவனிடம் அகப்பட்டுக் கொள்கிறார். சாதனைகள் பழகப் பழக இறைவனின் அருள் ஏற்படும்போது அவரது காட்சி கிட்டுகிறது. பக்தன் பகவானைத் தன் இதயத்தில் தாங்கிக் கொண்டு உலகில் வாழ்கிறான்.

✦ இறைவனைக் காணவேண்டும் என்று மனம் ஏங்குகிறது. உயிர் துடிக்கிறது. இந்த நிலையில்தான் இறைவனின் தரிசனம் கிட்டும். இறைவனை அடைய வேண்டுமானால் பிரம்மச்சரியத்தைக் கடைபிடிக்க வேண்டும். இறைவன் தூய பக்தர்களிடம் அதிக அளவில் பிரகாசிக்கிறான்.

✦ அவதார புருஷரை நினைப்பது இறைவனை நினைப்பதற்குச் சமம். எவ்வளவு இடையூறுகள், ஆபத்துக்கள் வந்தாலும் ஞானி மனம் கலங்க மாட்டான்.

✦ இறைவனை அடைந்தபிறகு ஒருவனுக்கு உலகப் பொருள்களில் மயக்கம் தோன்றாது. இறைவனே உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களாகவும் ஆகியிருக்கிறான்.

✦ எவன் இறைவனை அடைய ஏங்கி நிற்கிறானோ, அவன்மீது இறைவனின் கருணை விழுகிறது. இறைவன் நாமத்தில் பக்தனுக்குத் தீவிர நம்பிக்கை இருக்க வேண்டும். இறைவனே உலகம் என்ற இந்த நம்பிக்கை ஏற்பட்டால் எல்லாச் சிக்கல்களும் ஒழிந்து தீர்வு காண முடியும்.

✦ "ஆண்டவனே கர்த்தா, நான் கர்த்தா அல்ல" என்ற நம்பிக்கை எவனிடம் இருக்கிறதோ அவன் ஜீவன் முக்தன். மனதில் தீய வாசனைகள் இருக்கும் வரையில் தூய பக்தி உண்டாவதில்லை.

✦ இறைவனை ஆராய்ச்சியால் அறிந்துகொள்ள முடியாது, எல்லாம் நம்பிக்கையைச் சார்ந்தது.

✦ தனித்த ஓர் இடத்தில் மங்கைப் பருவமுள்ள ஒரு பெண்ணைக்கண்டால், அவளைத் தன் மனதில் தாய் என்று வணங்கிப் போகிறவனே உண்மைத் துறவின் தன்மைகளைக் கொண்டவன்.

## கிராமத்து வடலிகள்

கோடை வெயிலின் கோரப்பிடியிலே
ஒடிப்பதுங்குவோர் நிழல் தானும் இல்லை
கருகிய பூமியில் குடிசைகள் தெரிந்தன
காவலுக்கென்றோ வடலிகள் கூட்டம்
பெரு வெயில் அங்கே பேசாதிருந்தது!

அடுப்பங்கரையில் பனம்பழக் குட்டான்
ஆறுதலாய் பலகாரங்கள் செய்ய
தடுக்கில் பனாட்டும், தரையில் கிழங்குகள்
அவற்றில் பலவோ ஒடியல்களாகி
கூழாய், கிழங்காய், கஞ்சியாய் பகிர்ந்தன!

அடைமழை வருமுன் அடுப்படிக்கென்று
காங்குகள், ஊமல்கள் கொக்காம் பாளைகள்
காய்ந்த பன்னாடைகள் காவோலை என்று
மடையென பிறிதோர் கொட்டிலில் கிடந்தன

பனைகளைப் பிளந்து செருக்கிய மரங்கள்
இடையிடை இணைந்த வைரச்சலாகைகள்
நாற்புறம் மட்டைகள் சுற்றிய மடுவம்
ஓலைப்பாய்களில் கடகங்கள் பெட்டிகள்
ஒட்டிக்கிடக்கும் கல்லாக்காரங்கள்
ஒருபுறம் குவிந்த பனங்குட்டான்கள்
தெருவினில்போவோர் தேடியே வந்து
விசிறிகள் தொப்பிகள் வாங்கிடும் காட்சிகள்!

கருப்பநீர் சிறுவனின் கடவாய் வடிக்கும்
கைப்பிழா உள்ளே ஒடியல் பிட்டும்
விருப்புடன் நுங்கைப் பருகுவோர் சிலரும்
மாலையானதும் மகளிர் பலரும்
கட்டுக்களாக ஓலைகள் கிழித்து ஒருபுறம் குவிக்க
கறவைகள் உண்டே பாலினை சுரக்கும்
இடையிடை பனங்காய்ச் சீவல்கள் உண்டு
இன்னொரு புறத்தில் கன்றுகள் துள்ளும்!

ஆழக் கிணற்றின் நீர் சுமந்தேற்ற
அங்கே பனைகள் துலாக்களானது
நாரைப் பின்னி கயிறுபோலாக்கி
பட்டையிறப்பிலே வயிறு நிறைந்தது
ஆச்சியும் அப்புவும் எப்படிச் சௌக்கியம்?
பனங்காட்டு நரிகள் சலசலப்புக் அஞ்சா!
எத்தனை பனைகள் எமக்குத்தெரியுமா?
என் மனைவிபோல கற்பு அகத்திலே
கொண்டவை இவைகள்
அதனால் தானே "கற்பகம்" என்றோம்
கட்டியணைத்தே கதைபல சொன்னார்!

முதுமையிலும் அவரென்ன கம்பீரம்!
முற்றிய நுங்காய் பற்கள் சிரித்தன!
விதம்விதமாகப் பலகாரங்கள்
பனம் பொருள் தன்னில் பாகமாய்ச் செய்வாள்
இதுவரை வைத்தியர் வீடு போகேல்லை
மூலிகை எல்லாம் இதனுள் சங்கமம்
இரசாயன மருந்துகள் போடாத உணவுகள்
புழங்குவது நாம் பனம் பொருள் பாத்திரம்
ஈர்க்குக் காட்டையில் ஈர வெங்காயம்
இடையிடை உறியில் தயிர் முட்டிகளும்
நீத்துப் பெட்டிகளும் தொங்கித் தெரிந்தன
எறும்புக்கு மருந்தேன்? ஏற்றினேன் என்றார்.

போரினால் பனை பல அழிந்தே போச்சு
பொருட்தடை, மீன் தடை எது வந்தபோதும்
பட்டினி என்பது இருந்ததேயில்லை
கொடு வெயில் சுட்டு பனை படுவதில்லை
வெள்ளம் நிறைந்தும் அழுகுவதில்லை
காப்பரண் என்று கண்டபடியே
பனைகள் அழித்தீர், பொக்கைவாய் பொரிந்தது
மூப்புகள் மனிதர்க்கு மட்டும்தானா
வடலிகளையாவது வளரவிடுங்கள்
காப்பனவற்றை அழித்திட வேண்டாம்
நாளை அவைகள் கற்பகமாகும்
நாமும் அந்த நிழலில் வாழ்வோம்
இன்றே செய்வோம் பனம்விதை நடுகை
நன்றே செய்வோம் பராமரிப்போம்

"பனை வாழ்ந்தாலும் நூறு வருடம்"
"பனை இறந்தாலும் நூறு வருடம்"

நாகலிங்கம் சற்குணநாதன்
முகாமைத்துவ உதவியாளர்,
சந்தைப்படுத்தல் பகுதி,
பனை அபிவிருத்திச்சபை

# வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடர் குருநகர் பாடும்மீன் பிளேஓவ் சுற்றுக்கு தகுதி










வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள்வி.க. நடத்தும்வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட சமரில் 16.10.2016 அன்று நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடு மீன் வி.க எதிர்த்து மன்னார் கில்லரி வி.க மோதியது. தோல்வியடைந்தால் பிளே ஓவ் சுற்று வாய்ப்பினை இழக்கும் போட்டியாக அமைந்ததனால் இரு அணியினருக்கும் மிக முக்கியமான போட்டியாக அமைந்தது.

விறுவிறுப்புடன் ஆரம்பமான போட்டியின் 10 ஆவது நிமிடத்தில் கிடைக்கப்பெற்ற தண்ட உதையினை பாடும்மீன் வீரர் பிராங்கோ கோலாக மாற்றினார். தொடர்ந்த ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் கில்லரிக்கு கிடைக்கப்பெற்ற தண்ட உதையினை பாடும்மீன் கோல் காப்பாளர் இலாவகமாக தடுக்க கோல் பெறும் வாய்ப்பு பறிபோனது. எனினும் முயற்சியுடன் ஆடிய கில்லரி 30 ஆவது நிமிடத்தில் கிடைக்கப்பெற்ற மூலை உதை யினை டிலக்சன் தலையால் முட்டி கோலாக மாற்ற ஆட்டம் 1:1 என சமநிலையானது.

எனினும் ஆட்ட வேகத்தினை அதிகரித்து ஆடிய பாடும்மீன் 35 ஆவது நிமிடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான பந்து பரிமாற்றத்தினை விசோத் தலையால் முட்டி சிறப்பான கோலாக மாற்றி அணிக்கு வலு சேர்த்தார். அடுத்து 42 ஆவது நிமிடத்திலும் சாந்தனின் துல்லியமான உதை கோல் கம்பத்தின் மேல் கம்பத்தில் பட்டு உள் நுழைய முதற்பாதி ஆட்டத்தில் 3:0 என பாடும்மீன் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்திய பாடும்மீன் கிறிஸ்ரன் மூலமாக 83 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலினை பதிவு செய்தது. ஆட்ட நேர முடிவில் 4:1 என பாடும்மீன் வி.க வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக பாடும்மீன் வி.க கோல் காப்பாளர் ராஜ்° தெரிவு செய்யப்பட்டதுடன் அணிக்கான பரிசினை கழக நலன் விரும்பி சிவகுமாரன் வழங்கி கௌரவிக்க பதக்கத்தினை செ.பாலசுந்தரம் அணிவித்தார்.

தொடர்ந்து வரும் ஆட்டத்தில் பாடும்மீன் வி.கழகம் மன்னார் சென். லூசியஸ் வி.கழகத்தை சந்திக்கவுள்ளதுடன் வெற்றி பெறும் அணி பிளே ஓவ் சுற்றுக்கு தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இன்றைய போட்டி

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான A பிரிவினருக்கான கரப்பந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கைதடி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங்ஸ் பட்டத்திற்கான மென்பந்து போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. போட்டியானது அணிக்கு 8 பேர் 6 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாக நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

மேற்படி சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளும் விளையாட்டுக்கழகங்கள் 076 705 3019, 077 389 8892 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாக தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (க)






யா/புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயம் தனது கல்வி பணியில் 140 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் நடத்திய அமரர் டேவிற் அல்வின் ஞாபகார்த்தமாக மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியும் பரிசில் நிகழ்வும் அண்மையில் நடைபெற்ற போது...

# உதயதாஸ் ஹெற்றிக்கோல் பலாலி விண்மீன் வெற்றி



வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் மற்றும் பலாலி விண்மீன் அணிகள் மோதின.

விறுவிறுப்பான போட்டியில் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 20 ஆவது நிமிடத்தில் பிரகாஷ் ஒரு கோலை போட முற்பாதியில் 1:0 என யங்கம்பன்ஸ் அணி முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட விண்மீன் அணிக்கு 29 ஆவது நிமிடத்தில் டேமியன் ஒரு கோலை போட ஆட்டம் சமநிலையானதோடு விண்மீன் வசமானது.

அதிரடியாக ஆடிய உதயதாஸ் 33,36,41 ஆவது நிமிடங்களில் ஹெற்றிக் கோல்களை பதிவு செய்தார்.

மேலும் 45 ஆவது நிமிடத்தில் நிஷாந்தன் ஒரு கோலை போட இறுதியில் விண்மீன் 05:01 என்ற ரீதியில் வெற்றி பெற்றுக் கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக உதயதாஸ் தெரிவானார். (கு)

# தேசிய மட்டப் போட்டியில் வெற்றிபெற்றோர் கௌரவிப்பு







(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி மத்திய கல்லூரியின் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலையில் வெகு விமர்சையாக இடம்பெற்றது. கடந்தாண்டு தேசிய மட்டப் போட்டியில் உயரம் பாய்தலிலே நான்காமிடம் பெற்றவரையும் மாகாண மட்டத்தில் கூடைப்பந்து போட்டியிலே மூன்றாமிடம் பெற்றவர்களையும் மாகாண மட்டத்தில் பழு தூக்கல் போட்டியிலே 2,3ஆம் இடங்களைப் பெற்றவர்களையும் மாகாண மட்டத்தில் உயரம் பாய்தலிலே நான்காமிடம் பெற்றவரும் வெற்றியெற்றவர்களான 53 பேர் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். பாடசாலை முதல்வர் ரி.ஜேசுதானந்தர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலயக் கல்வி பணிமனை அதிகாரிகள் பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ந-28)

## வாள்வெட்டுடன்...

இதுவே இன்றைய யாழ்.குடாநாட்டின் நிலைமையாகும். இந்த நிலையில் வாள்வெட்டுடன் தொடர்புடையவர்களுக்கு பிணை வழங்க முடியாது என தெரிவித்த நீதிபதி இளஞ்செழியன் விளக்கமறியலில் உள்ள மாணவன் ஒருவனுக்கு பிணை வழங்க மறுப்பு தெரிவித்து பிணை மனுவையும் தள்ளுபடி செய்துள்ளார்.

வாள்வெட்டுக்களில் ஈடுபட்டிருந்தது மற்றும் கைக்குண்டு உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மாணவன் ஒருவருடைய வழக்கிலேயே இவ்வாறு பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின்போது நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்ததாவது.

வாள்வெட்டுச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருந்தது மற்றும் கைக்குண்டு வைத்திருந்தது ஆகிய குற்றச்சாட்டுக்களில் குறித்த மாணவன் உள்ளிட்ட குழுவினர் கைது செய்யப்பட்டதையடுத்து, யாழ்.குடாநாட்டில் வாள்வெட்டுச் சம்பவங்கள் குறைவடைந்தன. வீதி அடாவடித்தனங்கள் குறைந்திருந்தன. இப்போது யாழ்.குடாநாட்டில் சில வன்செயல்கள் தலைதூக்கியிருக்கின்றன. இந்த நிலையில் குறித்த மாணவன் உள்ளிட்ட குழுவினரைப் பிணையில் செல்ல அனுமதித்தால், யாழ் குடாநாட்டின் அமைதி நிலைமை பாதிக்கப்படும். எனவே இவருக்குப் பிணை வழங்க முடியாது.

இதன்மூலம் வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபடும் எந்த நபருக்கும் இலகுவில் பிணை கிடையாது என்ற செய்தி யாழ் குடாநாட்டில் வாள்களுடன் மோட்டார் சைக்கிள்களில் வலம்வர எத்தனிக்கும் ஒவ்வொருவருக்கும் சென்றடைய வேண்டும் என இளஞ்செழியன் தனது கருத்தில் தெரிவித்தார். (செ-4)

## தமிழ் மக்களை...

பதின்மூன்றாம் திருத்த சட்டத்தின் அடிப்படையில்தான் தமிழர்களுக்கான தீர்வை தென்னிலங்கை அரசு வழங்க போகின்றது என நாங்கள் பலமுறை கூறி வந்துள்ளோம். அது தற்போது நிதர்சனமாகி வருகின்றது.

ஆனால் சமஷ்டியை பெற்றுத்தருவோம் என தேர்தல்களில் வாக்களித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, புதிய அரசியலமைப்பில் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்ற திட்டத்திற்கு ஆதரவளித்துள்ளது.

இதுபோன்ற நிலைமைகளில்தான் சர்வதேசத்தையும் இலங்கை அரசையும் திரும்பி பார்க்க வைத்த எழுக தமிழ் போராட்டம் நடைபெற்றது. எழுக தமிழை சர்வதேசம் தவிர கூட்டமைப்பும் கண்டு அஞ்சியுள்ளது. அந்த அச்சத்தின் வெளிப்பாடுகள்தான் கூட்டமைப்பின் தற்போதைய செயற்பாடுகள். இப்போது மெல்லமெல்ல அரசை எதிர்ப்பது போன்ற நிலைப்பாட்டினை கூட்டமைப்பு எடுக்க ஆரம்பித்துள்ளது.

பல சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிட்டு இப்போது எதிர்ப்பது போல் நடிப்பது ஒரு பயனையும் தரப்போவதில்லை. கடந்த முப்பது வருட ஆயுதப்போராட்டத்தினால் என்னத்தை கண்டீர்கள் என கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் சுமந்திரன் வவுனியாவில் கூறியுள்ளார். இதுதான் அவர்களுடைய உண்மையான நிலைப்பாடு, கூட்டமைப்பு என்பதே விடுதலைப்புலிகளால்தான் கட்டமைக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக சம்பந்தன் ஏற்றுக் கொண்டுதான் கடந்த கால தேர்தல்களில் வெற்றி பெற்றார் என்பதை கூட இன்று அவர் மறந்து விட்டார்.

இதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும், ஒற்றையாட்சிக்கு தமிழர்களே ஆதரவளித்தார்கள் என்ற கயமைத்தனமான அரசியலை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது. உடனடியாக மக்கள் விழிப்படைய வேண்டும். இல்லாவிட்டால மீண்டும் நாம் ஏமாற்றப்படுவது யாராலும் தடுக்க முடியாது என்றார் அவர். இந்த ஊடக சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனும் கலந்து கொண்டிருந்தார். (செ-4)

## சம்பள உயர்வு...

வேலையும் இந்த உடன்படிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலதிகமாக பறிக்கப்படும் தேயிலை கொழுந்து கிலோவிற்கு தற்போது 25 ரூபாயும் ரப்பருக்கு 30 ரூபாயும் வழங்கப்படுகிறது. இந்த கொடுப்பனவிலும், தொழிலாளர்களுக்கு 5 ரூபாய் அதிகரிப்பு கிடைக்கின்றது.

குறிப்பிட்ட 6 மாத காலத்திற்குள் தேயிலை தோட்டங்களை தோட்ட நிர்வாகங்கள் துப்புரவு செய்து கொடுக்க வேண்டும் என்றும் அந்த உடன்படிக்கை கூறுகின்றது

தங்களுக்கு 1000 ரூபாய் சம்பளமும் அதற்கான நிலுவை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் வழங்கப்பட வேண்டும் என தொழிலாளர்கள் கடந்த 3 வாரங்களாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் புதிய உடன்படிக்கையில் நிலுவை கொடுப்பனவு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

தேயிலை உற்பத்தி வீழ்ச்சி , உலக சந்தையில் தேயிலை விலை வீழ்ச்சி போன்ற காரணங்களை முன் வைத்து தோட்ட நிர்வாகங்களின் சம்மேளனம் கோரிக்கைகளை ஏற்கெனவே நிராகரித்து விட்டது.

இம் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் புதிய உடன்படிக்கை நடைமுறைக்கு வருவதன் காரணமாகவே நிலுவை கொடுப்பனவுக்கு வாய்ப்பு இல்லாமல் போயுள்ளதாக கூறப்படுகின்றது. தோட்ட நிர்வாகங்களின் சம்மேளனத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையிலான இந்த உடன்படிக்கையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் , பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியன கைச்சாத்திட்டுள்ளன எனினும் நாளொன்றுக்கு 110 ரூபாய் அதிகரிப்பிலான புதிய உடன்படிக்கை தொழிலாளர்கள் நலன்சார்ந்த தங்களின் கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை முழுமையாக கொண்டிருக்கவில்லை என தொழிற்சங்கங்கள் கூறுகின்றன. (செ-11)

## பாடசாலை மாணவி...

நேற்று காலை 9.30 மணியளவிலேயே வீட்டின் அறை ஒன்றில் இருந்தே மாணவி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமானது பிரேதப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேதப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மனவிரக்தி காரணமாகவே பிரஸ்தாப மாணவி தற்கொலை செய்திருக்கலாம் என தெரிவித்திருந்தனர். (செ-30)

## ஊழல் விசாரணை...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 12ஆம் திகதி மேற்கொண்ட சத்விரு சங்ஹித உரையில் ஊழல், மோசடிகள் மற்றும் பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் இரகசிய பொலிஸார், எப்.சீ.ஐ.டி என்ற பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றின் விசாரணைகள் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைய இடம்பெறுவதாக குற்றம்சாட்டியிருநதார்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி விசாரணைகளை முடக்கும் நோக்கத்தில் உரையாற்றவில்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் சமரசிங்க, ஜனாதிபதி உரையை திட்டமிட்டு சில ஊடகங்கள் திரிபுபடுத்திவிட்டதாக குற்றம்சாட்டியுள்ளார்.

தமது உயிர்களை தியாகம் செயதும், பணயம் வைத்தும், யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்திய படைத் தளபதிகள் மற்றும் படையினரை சட்டத்தின் ஊடாக தண்டிக்கப்படுவதாக ஜனாதிபதி உணர்நததாலேயே அவர் சத்விரு சங்ஹித உரையை நிகழ்த்தியதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க, இதன் ஊடாக படையினரை காப்பாற்றுவதை மாத்திரமே அவர் நோக்கமாகக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பிரதான நோக்கம், நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி, அதன் ஊடாக நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூகத்தை முன்னேற்றுவதே என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி சர்ச்சைக்குரிய உரையையடுத்து இலஞ்ச ஊழல் மோசடி விசா ரணை ஆணைக்குழுவின் பணிப்பாளா தில்ருக்ஷி டயஸ் நேற்று முன்தினம் பதவி விலகியிருந்தமை தெரிந்ததே. (செ-5)

## சிறுபான்மை...

மனித உரிமைகள் பேரவையின் விஷேட நிபுணர் ரீட்டா இசாக் நாடியாவிற்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது கருத்துரைத்த ரீட்டா, காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் மற்றும் தேசிய நல்லிணக்க பொறிமுறை உள்ளிட்ட விடயங்களில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் பங்களிப்பு பாராட்டத்தக்கது.

எனினும் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையிலேயே நல்லிணக்க முயற்சிகளுக்கு வரவேற்பு கிடைக்கும் என்றார். இலங்கையில் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக பரிந்துரைககளை உள்ளடக்கிய முழுமையான அறிக்கையை பெப்ரெவரி மாதம் இறுதியில் ஜெனிவாவில் சமர்ப்பிக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)


### விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்துக்கு புடைவை வியாபார அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை.

**சென்னை பெசன் வேல்ட்**
63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்

(6376)


### கொட்டடி கற்குளம் ஒழுங்கை கற்குளம் வயல் விற்பனை
### கேள்விப் பத்திரம் கோரல்

விடத்தல் தீவு கற்பகப்பிள்ளையார் ஆலயத்திற்குச் சொந்தமானதும் யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட 19ஆம் வட்டாரம் சோலைவரி இல.44, கொட்டடி கற்குளம் ஒழுங்கையில் அமைந்துள்ளதுமான கற்குளம் வயல் என்னும் பெயர் கொண்ட ஆதனத்தினை குறித்த ஆதனத்தின் புனருத்தாரண பணிகளிற்கு தேவையான நிதியினை பெற்றுக் கொள்ளும் நோக்கில் விற்பனை செய்ய யாழ்.மாவட்ட நீதிமன்றில் நடைபெற்ற **நம்பிக்கைச்** சொத்து 2013/06 என்ற வழக்கில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அனுமதிக்கமைய இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை விற்பனை செய்வதற்காக கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

குறித்த ஆதனங்களை கொள்வனவு செய்ய விரும்புவோர் இதன் கீழ் காணப்படுவதைப் போன்ற தொரு கேள்விப் பத்திரத்தை தயாரித்து அல்லது போட்டோ பிரதி எடுத்து பூர்த்தி செய்து 02.11.2016ஆம் திகதிக்கு முன்னர் **விடத்தல் தீவு கற்பகப்பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா, கற்பகப்பிள்ளையார் கோவில், விடத்தல் தீவு, மன்னார் மாவட்டம்** என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். 05.11.2016ஆம் திகதியன்று கற்குளம் வயல் ஆதன வளாகத்தில் கேள்விப் பத்திரம் திறக்கப்பட்டு ஆகக்கூடிய விலை கோரியோருக்கு குறித்த ஆதனம் அறுதியாக விற்கப்படும்.

குறித்த ஆதனத்தை கொள்வனவு செய்பவர் அன்றைய தினம் குறித்த பெறுமதியின் 1/2 பங்கை பணமாக செலுத்தி பற்றுச் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். மிகுதிப் பணத்தை 21 நாட்களிற்குள் செலுத்தி தமது செலவில் உறுதி எழுதிக்கொள்ள வேண்டும். 21 நாட்களுக்குள் பணத்தை செலுத்தத் தவறின் குறித்த ஆதனம் வேறு நபர்களுக்கு விற்பனை செய்யப்படும் என்பதுடன் முற்பணமாக செலுத்திய பணத்தில் 10% செலவுப் பணமாக அறவிட்ட பின்னர் மிகுதிப் பணம் மீள வழங்கப்படும்.

**கேள்விப் பத்திரம்**

1.பெயர்
2.முகவரி
3.தேசிய அடையாள அட்டை இலக்கம்
4.தொலைபேசி இலக்கம்
5.கொள்வனவு செய்ய விரும்பும் காணித் துண்டு இல.
6.செலுத்த தயாராய் உள்ள பெறுமதி

| இல. | விஸ்தீரணம் | ஆதனத்தின் குறைந்த விலை |
|---|---|---|
| 5 | நெ.ப 2 குளி 1.77 | 700,000/- |
| 10 | நெ.பர 1 குளி 2.4 | 310,000/- |
| 12 | நெ.பர 1 குளி 1.62 | 300,000/- |
| 15 | நெ.பர 1 | 270,000/- |
| 16 | நெ.பர 1 | 270,000/- |
| 17 | நெ.பர 1 | 265,000/- |
| 18 | நெ.பர 0 குளி 10.58 | 210,000/- |
| 21 | நெ.பர 1 குளி 0.28 | 235,000/- |
| 24 | நெ.பர 1 குளி 0.32 | 315,000/- |

**தாமோதரம்பிள்ளை**
**தத்துவகாரர், தர்மகர்த்தா**
**கற்பகப்பிள்ளையார் ஆலயம்**
**தர்மமடம், விடத்தல் தீவு.**

(6372)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
### விளையாட்டு விருதுகள் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா 22.10.2016 (சனிக்கிழமை) அன்று பி.ப 2.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இவ் விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களும், சிறப்பு விருந்தினராக முன்னாள் இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் தலைவியும், கொழும்பு செலான் வங்கியின் அலுவலருமாகிய செல்வி தர்ஜினி சிவலிங்கம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2015ஆம் ஆண்டிற்கான விளையாட்டு அணிகளை பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்களை அன்று பி.ப 1.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கிற்கு தவறாது வருகை தருமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**பதிவாளர்**
**18.10.2016**

(சி-6158)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-4438)

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

FLC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French·
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007,
University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவர்.

(C-6109)

DELF A1, A2,B1பரீட்சைகளில் 100 % சித்தி. 1145 மாணவர்கள் French கற்றுள்ளனர்.

No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 22.10.16 சனி 8 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 24.10.16 Mon @ 3.30pm.

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

# மரண அறிவித்தல்



## கந்தையா தங்கம்மா

குருவளை, அளவெட்டி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தங்கம்மா 18.10.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மாவின் மகளும் இராமநாதர் - சின்னத்தங்கத்தின் மருமகளும் காலஞ்சென்ற ஐயாத்துரை, செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும் அருளானந்தராசா, சிவபாதசுந்தரம், இரஞ்சிதாதேவி, அமரர் சற்குணானந்தம், இரஞ்சிதமலர் ஆகியோரின் தாயாரும். சந்திரவதனா, கமலாதேவி, பாலராஜ், அருந்தவராஜா ஆகியோரின் மாமியாரும். அருளானந்தம், ஆனந்தகுமார், பிறேமானந்தன், துஸ்யந்தி, ஜெயானந்தன், ரம்மியா, லோகிதன், லாவண்யா, கிரிபரன், சாம்பவி ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.10.2016) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்துப் பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

குருவளை,
அளவெட்டி தெற்கு

(C-6102)

தகவல் : குடும்பத்தினர்
தொ. இல - 077 8689 240

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## இனப்பிரச்சினை...

லக்ஸ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் இனப்பிரச்சினைக்கு சிறந்த தீர்வொன்றை வழங்காத காரணத்தினால் தான், 30 வருட கால யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தனதுரையில் குறிப்பிடுகையில், எம்மில் தவறு எங்கு இடம்பெற்றுள்ளது என்பதை அறிந்து. அவற்றை திருத்தி முன்நோக்கிப் பயணிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் ஏற்பட்ட இனங்களுக்கு இடையிலான பிரச்சினை தொடர்பில் உரிய கவனம் கொடுக்காமை நாங்கள் இழைத்த பெருந்தவறாகும்.

மலேசியாவில் அந்நாட்டுப் பிரஜைகள் 49 வீதமானவர்களே உள்ளனர். 51 வீதமானவர்கள் சீன நாட்டவர்கள். ஆனாலும் அந்த நாட்டில் பாரியதொரு சிவில் யுத்தம் ஏற்பட்டிருந்தது. அதன் பின்னர் இனங்களுக்கு இடையிலான பிரச்சினை தீர்க்கப்பட்டு, அனைத்து இனங்களுக்கும் சுதந்திரமாக வாழக் கூடிய சூழ்நிலை உருவாக்கிக் கொடுக்கப்பட்டு புதிய அரசியலமைப் பும் உருவாக்கப்பட்டது. சிங்கப்பூரும் அப்படித்தான். சுதந்திரம் கிடைத்து ஓரிரு வருடங்கள் கழிந்த போது இனங்களுக்கு இடையிலான பிரச்சினை தீர்க்கப்பட்டது.

எமது நாட்டில் இனங்களுக்கு இடையிலான பிரச்சினை துரதிர்ஷ்ட வசமாக தீர்க்கப்படவில்லை. இனங்களுக்கு இடையிலான பிரச்சினையை பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்ற அனைத்து கட்சிகளும் முயன்ற காரணத்தினால் தான். 30 வருட கால யுத்தத்திற்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று.

நாடு சுதந்திரம் அடைந்த போது அப்போதிருந்த தலைவர்கள் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தால் இந்த நாடு இவ்வாறான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்காது.

எமக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சிப்பதாக கடந்த தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூறினார்கள்.

எனவே நாடாளுமன்றில் 1952 ஆம் ஆண்டில் சிங்கப்பூர். மலேசியாவில் இருந்ததைப் போன்று அனைத்து இனங்களுக்கும் சுதந்திரமாக வாழக்கூடிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவோம்.

நமது நாடு சுதந்திரம் அடைந்து 67 வருடங்கள் ஆகின்ற போதிலும் இலங்கைப் பிரஜை என்ற அடையாளத்தை உறுதிசெய்ய முடியாது போயுள்ளது. இந்தியாவில் 25 மாநிலங்கள் உள்ளன. ஒரு மாநிலத்தில் 50 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உள்ளனர். ஒவ்வொரு மாநிலங்களிலும் வெவ்வேறு மொழிகள் உள்ளன.

ஆனாலும் நாட்டை ஒன்றிணைத்து ஒரு நபர் வெளியில் சென்று பெருமையாகக் இந்தியன் என்று கூறும் வண்ணம் அந்த நாட்டில் சுதந்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (செ-5)

அமெரிக்க லொத்தர் விசா

2018ல் நீங்களும் அமெரிக்காவில்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

அரிய வாய்ப்பு - சில தினங்களுக்கு மட்டுமே 0768226230

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

சென்ற வருடம் (2015) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 19 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|
| 0768226241 | 0768226240 | 0776699892 | 0768226237 | 0776697960 |

(C-6107)

மேலும் தகவல்களுக்கு--> www.facebook.com/v2tandt

## தொடரும் இழப்பு...



எந்த ஒரு மனிதனின் இழப்பும் துயரத்தை தரும் ஆனால் ஒரு ஈடு இணையற்ற மனிதனின் இழப்பு ஒரு சமூகத்தையே நிர்கதிக்கு உள்ளாக்கும்.

அது போல தான் அமைந்தது பிரபல வணிகக் கல்வி பேராசான் அமரர்.பஸில் சேர் அவர்களுடைய மரணமும்.

போர் எம்மை நசுக்கின போது எல்லாவற்றையும் இழந்து தவித்த நாம் கல்வியை இழக்கவில்லை. அக்காலத்தில் வணிகத்துறையில் தேசிய மட்டத்தில் மாணவர்கள் பலர் சாதனைகள் புரிந்தனர் அதில் பஸில் சேர் அவர்களின் பங்கு மிக காத்திரமானது. அவர் ஒரு ஆசிரியராக மட்டுமின்றி ஆர்பாட்டம் அல்லாதவராக தற்பெருமையற்ற ஒரு நல்ல மனிதனாக பகட்டில்லாத ஒரு மிக அமைதியான என்றுமே சிரிப்பு மாறாத முகத்துடன் தனது வாழ்வியலை வாழ்ந்து காட்டினார். மாணவர்கள் வணிகக் கல்வியை பரீட்சைக்காக மட்டும் கற்க கூடாது தமது நடைமுறை வாழ்கைக்கும் பயனுள்ளதாக கற்கவேண்டும் என்று பலவிடயங்களை தேடிக் கற்பித்த ஒரே ஆசிரியர் என்றால் அது மிகையல்ல. மாணவர்கள் பஸில் சேர் இடம் கற்க வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றது என்ற கருத்துக்கு அப்பால் இன்றைய ஆசிரிய சமூகமும் அவரது வாழ்வியலை ஒரு பாடமாகக் கற்க வேண்டிய தேவையிருக்கின்றது என்பது யாராலும் மறுதலிக்க முடியாத உண்மை. அத்துடன் தனியார் கல்வி நிறுவனங்களுக்கென்றொரு அடையாத்தை விதைத்தவர்.

இன்று இவர் நித்திய வாழ்விற்குள் நித்திரை கொள்ளுகின்றார்.

அவரது மரணம் பல ஏற்றுக்கொள்ள முடியாத வினாக்களை எம் மனதில் விதைத்திருக்கின்றது. மதங்களும் அதன் விழுமியங்களும் ஒரு மனிதனின் வாழ்வியலை மேம்படுத்தவும் அதன் மூலம் அவரைச் சார்ந்தோரும் அச் சமூகமும் பயன்பெறவும் வேண்டும்.

அமரர் எஸ்.வரதராஜன் அவர்களால் (பொருளியல் ஆசிரியர்) தனதுமாணவனாக தனது சக ஆசிரியராக மிகவும் நேசிக்கப்பட்ட பஸில் சேர் அவர்களுடைய பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரும் அதற்கு மேலாக அவரது இழப்பால் தவிக்கும் மாணவர் சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

தாயகம் டிஜிற்றல் (யாழ்.பல்கலைக்கழகம் அருகில்)

(6376)



# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் நடுநாயகம்

மலேசியாவை பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டி, வெள்ளவத்தையை (பெரேரா லேன்) வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் நடுநாயகம் நேற்று (18.10.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலேசியன் பென்சனியர் சின்னையா-- சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடுநாயகத்தின் (P.H.I) அன்பு மனைவியும், சகுந்தலாதேவி (வெள்ளவத்தை), சூரியகுமார் (அதிபர் யா/சுதுமலை வடக்கு த.க வித்தியாலயம்), கௌரிதேவி (கனடா), சிவகுமார் (BUILT ELEMENTS Ltd - இரத்மலானை), கிருஸ்ணகுமார் (கொலன்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலச்சந்திரன் (Lankem Ceylon plc), மாலினி, கருணாநிதி (கனடா) சுகந்தி (Management Assistant), திவ்வியரஞ்சினி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீபன், பிரதாபன், பால்ராம், சுதர்சன், ஜெனனி, பிரியதர்சன், வாசுதேவன், வாசுகி, நிதர்சனா, தரணியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

(6378)

தகவல் :- குடும்பத்தினர்
தொ.பே: 077 654 9620

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.